Reg. No. M. 1434

தனிப்பிரதி அணா 1—6

157

நாடார்குலமித்திரன்

THE NADAR KULA MITRAN.

நாடார்குல மித்திரன் சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 4-0-0.

சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 5-0-0.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று திங்கட்கிழமை தோறும் வெளிவரும்,

வாரப் பதிப்பு.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்திரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன் விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 8-0-0.

கால்வரை விளம்பரம் அவ்வளவு 1-க்கு ரூ 0-8-0

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 7 | கலியப்தஞ்ரூ௫௨௭ குரோதன ஞு மார்கழி மீ ௫ச ௨ திங்கட்கிழமை 1925 ஞு டிசம்பர் மீ 28௨ | இதழ் 20

மிகப் பெரிய தருமம்! மிக்க தனம் பெறச் சமயம்!!

நாடார் மஹாஜன சங்கம்

ஏழை மாணவர்

ஸ்காலர்ஷிப் லாட்டரி.

1926-ஞு ஜூன் மீ 30 ௨ பிரைஸ் எடுக்கப்படும்.

சீட்டொன்றிற்கு ரூபாய் ஒன்று வீதம்

இரண்டு லக்ஷம் சீட்டுகள்.

22 சீட்டுகளடங்கிய புஸ்தகம்

கிரையம் ரூபாய் 20.

75,000 ரூபாய் 10,975 பிரைஸ்களாகக் கொடுக்கப்படும்.

1-வது பிரைஸ் ரூ 10,000

2-வது பிரைஸ் ரூ 5000 | 4-வது பிரைஸ் ரூ 1000

3-வது ,, ரூ 2000 | 5-வது ,, ரூ 1000

6-முதல் 10-வரை பிரைஸ்கள் ரூ 500 வீதம்

(மற்ற பிரைஸ்களின் விபரம் லாட்டரி புஸ்தகத்தில் காண்க)

பதினாயிரத்திற்கதிகமான பிரைஸ்கள் கொடுப்பதால் 30 புள்ளிகளில் ஒருவருக்குப் பிரைஸ் கிடைப்பது நிச்சயம்.

இரண்டு புஸ்தகங்களுக்கு குறையாமல் விற்பனைகளுக்கு ஸ்பெஷல் பிரைஸ்கள் கொடுக்கப்படும்.

மற்ற விபரங்களை காரியதரிசிகள், நாடார் மஹாஜன சங்கம், 221, மேலரதவீதி, மதுரை என்ற விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

நாடார் பாங்கு லிமிட்டெட் துரித்துக்குடி.

நன்றேஎன்பதை இன்றே செய்யுங்கள்.

நாடார் பாங்குலிமிட்டெட்டில் இந்தவருஷக்கடைசியோடு பங்குகள் கொடுக்கிறதை நிறுத்த ஏற்பாடு செய்யப்படுமாகையால் பங்கு சேர முந்துங்கள், பங்கு ஒன்றுக்கு ரூ10-அப்பிளிக்கேஷனோடு ரூ 2-8-0-ம் அலாட்செய்த இரண்டு மாதங்களுக்குள் ரூ 2-8-0-ம் மீதம் ரூ 5யும் தடவைக்கு ரூ 2-8-0க்கு மேற்படாமல் கேட்கும்போது செலுத்தினால் போதுமானது

மதுரையில் நாடார் ஹோட்டல்

என்மாமா மகா—ள—ள—ஸ்ரீ அ. பா. பாண்டிய நாடாரவர்கள் விலாசம் வைத்து நடத்திவந்த நான், நாளது குரோதனஞு வைகாசி மீ 14௨ முதல் வெங்கலக்கடைத்தெரு 3. நீர் சுத்தில் அருளுசல விலாஸ் என்று பெயர் வைத்து கனபாகத்தில் தேர்ச்சி பெற்ற சமையல்காரர்களைக் கொண்டு அறுசுவைப் பதார்த்தங்களுடன் போஜனம்சப்பளை செய்து வருவதால், கனவான்கள் யாவரும் எங்கள் ஹோட்டலுக்கு விஜயஞ்செய்து, போஜனமருந்தி, ஆத்ம திருப்தி செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

முக்கியகவனிப்பு,

காலையில் காபி சப்பளை கடைபெறும். வெளியூர்வாசிகள், தங்குவதற்கு இடவசதி மேற்படுத்தப்பட்டிருக்கிறது.

அ. சொ. வன்னிய நாடார், புரோப்ரைட்டர்

PERRY & Co.,

Famous Biscuits.

Different Varieties, Packed In Tins & Rolls Choice of The BestClubs & Hotels.

இங்கிலீஷ் டாக்டர்களாலும், பல மேதாவிகளாலும், பிரபுக்களாலும், பிரபல வியாபாரிகளாலும் சர்ட்டிபிக்கெட்கள் கொடுக்கப் பெற்றது. விலை, விபரம், நிலை முதலியவைகளுக்கு அடியிலுள்ள விலாசத்திற்கு எழுதவும். கேட்டால் இனாம்.

மானேஜிங் புரோப்ரைட்டர்,

பெரி அண்டு கம்பெனி,

உசிலம்பட்டி. (மதுரை ஜில்லா)

SORTS OF BISCUITS.

Marie—Nice
Arrow Root
Milk—Ginger nut
Family
Perry Special
Petit Beurre.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

ஸத்யதரிசனம்.

மகாத்மாவின் அனுபவம்.

ஜீவிய சரித்திர வரலாறு.

மகாத்மா காந்தி எந்னவே அறிவித்த படி தமது ஜீவியகால அனுபவங்களை விரிவாக 'நவஜீவன்' பத்திரிகையில் எழுதிக்கொண்டிருக்கிறார். தமது பிறப்பு, வளர்ப்பு, வம்சாவழி முதலியவற்றைக் குறித்து மகாத்மா இந்த அத்தியாயத்தில் தெரிவித்திருக்கின்றதாவது:—

காந்தி வம்சத்தார் ஆதியில் மளிகை வியாபாரிகள் என்று காண்கிறது. ஆனால் என்னுடைய பாட்டனார் காலந் தொடங்கி 3 தலை முறைகளுக்கு அவர்கள் க்ஷத்தியவர் சமஸ்தானங்களில் திவான்களாக இருந்திருக்கிறார்கள். எனது பாட்டனாராகிய உத்தமசந்தாந்தி எனப்படும் ஒரு காந்தி போர்பந்தர் சமஸ்தானத்துக்குக் கட்டுப்பட்டவர் என்று தெரிகிறது. போர் பந்தர் சமஸ்தானத்தில் நடந்த சில குழப்பங்களைக் கண்டு தவறாத மனம் கலியாமல் அச்சமஸ்தான திவான் பதவியைவிட்டு ஜூனாகாத் சமஸ்தானத்துக்குப் போகும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஜூனாகாத் நவாப்புக்கு அவர் இடது கையால் ஸலாம் செய்தாராம். இதென்ன இப்படி மரியாதைக்குறைவாக நடக்கிறார் என்று யாரோ ஒருவர் சமாதானம் கேட்டதற்கு, "என்னுடைய வலதுகையைப் போர்பந்தர் சமஸ்தானத்துக்கு எந்னவே அர்ப்பணம் செய்துவிட்டேன் என்று எனது பாட்டனார் பதிலளித்தாராம். அவர் தமது முதல் மனைவியை இழந்த பிறகு இரண்டாவது மனைவியை விவாகம் செய்து கொண்டார். முதல் தாரத்துக்கு 4 பிள்ளைகளும் 2-வது மனைவிக்கு 2 பிள்ளைகளும் பிறந்தனர். தான் சிறுவனாயிருந்தபோது அந்த 6 பிள்ளைகளும் மூத்தாள் இளையாள் பிள்ளைகளென்ற அறிவோ உணர்ச்சியோ எனக்கு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. 2-வது மனைவிக்குப் பிறந்தமுதலாவது பிள்ளையின் பெயர் கரம் சந்தகாந்தி. கரம்சாந்தியென்றும் அவர் அழைக்கப்படுவதுண்டு. கடைசிப் பிள்ளையின் பெயர் தளவிதாஸ் காந்தி. இவ்விரு சகோதரர்களும் போர்பந்தர் சமஸ்தானத்தில் ஒருவர்பின் மற்றொருவராக முதல் மந்திரிகளாயிருந்தனர். கரம்சந்த் காந்தி தான் என்னுடைய தகப்பனார். ராஜஸ்தான் கோர்ட்டில் அவர் ஓர் அங்கத்தினர். சிற்றரசர்களுக்கும் அவர்களுடைய உறவினர்களுக்கும்வந்த உக்கடிய தகராறுகளைத் தீர்க்க அக்காலத்தில் அது ஸ்தாபனமாயிருந்தது. இப்போது அந்தக் கோர்ட்டு அழிந்துவிட்டது. ராஜ்கோட், வாங்கனேர் சமஸ்தானங்களிலும் சிலகாலம் எனது தகப்பனார் முதன் மந்திரியாயிருந்தார். இறந்து போன காலம் அவர் ராஜ்கோட் சமஸ்தானத்திலிருந்து பென்ஷன் பெற்று வந்தார். அவர் 4 மனைவிகளை ஒருவர்பின் ஒருவராக மணந்தார். முதல் இரண்டு மனைவிகளுக்கும் இரண்டுபெண்கள் பிறந்தனர். கடைசி மனைவியாகிய புட்லி பாய்க்கு 3 பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தனர். நான் கடைப்பிள்ளை. என்னுடைய தகப்பனார் தமது பத்துக்களிடம் மிகுந்த பற்றுக்கொண்டவர்; சத்தியவாதி; தைரியசாலி; தாராள சித்தையுண்டு; ஆனால் கோபிஷ்டர். சரீர சம்பந்தமான இன்பங்களை யனுபவிப்பதிலும் ஓரளவு அவருக்கு ஆர்வமிருந்திருக்கக்கூடும். ஏனெனில் 40 வயதான பிறகு 4 வது மனைவியை மணந்தார். ஆனால் அவர் நித்தரோகி; பட்சபாதமற்ற தன்மையுடையவர் என்று குடும்பத்திலும் வெளியிலும் அவருக்கு நல்லபெயர் உண்டு. சமஸ்தான மன்னரிடம் மிகுந்த விசுவாசங்கொண்டவர். உதவி ராஜீய காரியஸ்தர் ராஜ்கோட் தாகூர் சாகிப்பைப்பற்றி ஏளனமாகப் பேசியபோது, எனது தகப்பனார் அதைப் பலமாக ஆட்சேபித்தார். காரியஸ்தருக்குக் கோபம் பிறந்தது. எனது தகப்பனாரை மன்னிப்புக் கேட்கும்படி சொன்னார். மன்னிப்புக்கேட்க எனது தகப்பனார் மறுத்துவிட்டார். அதற்காக சில மணிநேரம் அவர் காவலில்வைக்கப்பட்டார். அப்பொழுதும் உறுதியாயிருந்தமைக் கண்டு அவரை சாகிப் விடுதலைசெய்யும்படி உத்தரவிட்டார். பணத்தை சம்பாதித்துக் குவிக்க வேண்டுமென்ற அவா என்னுடைய தகப்பனாருக்குக் கிடையாது. சொற்ப ஜீவிதகால வைத்து விட்டுப்போனார். அவர் படித்தவரன்று. அனுபவத்தான் அவருக்குப் படிப்பு. 5-வது வகுப்புவரை படித்திருக்கக் கூடும். சரித்திரமோ பூகோளமோ அறியார். ஆனால் தமது அநுபவத்தைக் கொண்டு பல சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்கவும், நற்றுக்கணக்கானவர்களைக் கட்டிமேய்க்கவும் அவரால் முடிந்தது. மதப்பயிற்சி அவருக்கு அதிகமாயில்லை. ஆனால் கோயில்களுக்கு அடிக்கடி போவார். மத சம்பந்தமான பிரசங்கங்களைக் கேட்பார். சடைசி காலத்தில் ஒரு படித்த பிராம்மண பண்டிதரின் உதவியைக் கொண்டு பகவத்கீதை படித்துவந்தார். பிரதி தினமும் சில சுலோகங்களை உரக்கச் சொல்லுவதுண்டு. எனது தாயார் பரமபக்தை. பரிசுத்தமான குணமுடையவள்; ஆழ்ந்த மதப்பற்றுடையவள். பூஜை செய்யாமல் சாப்பிடுவதில்லை. கோயிலுக்குப் போகாமல் இருப்பதில்லை. சாதுர் மாஸ்ய நோன்பு இருப்பதில் மிகக்கடுமையானவிரதங்களை எடுத்துக்கொண்டு விடுவாள். ஆனால் சிரத்தையுடன் செய்வாள். சூரிய தரிசனம் செய்தபிறகே பொருட்படுத்துவதில்லை. சாதுர் மாஸ்ய விரதத்தில் போது ஒரு தடவை தேச அசௌகரியமேற்பட்டது. ஆனால் விரதம் நிற்கவில்லை. சாதுர்மாஸ்ய காலத்தில் ஒரு வேளைசாப்பாடு தான். அது போதாதென்று ஒரு நாள் ஒருமுழம் உபவாஸமிருந்தாள். சோர்வாற்போல் உபவாஸமிருக்கவும் அஞ்சுவதில்லை. ஒரு நடவை சூரியதரிசனமாகும் வரையில் அன்னமே புசிப்பதில்லை யென்று நிர்மானித்தாள். சூரியன் சன்னுக்குத் தென்படுகிறதா இல்லையாவென்று நாங்கள் வெளியேபோய் எட்டிப்பார்த்துக்கொண்டே யிருப்போம். மழை காலத்தில் சூரியனை எப்படிக்காண்பது? நிகழென்று எப்பொழுதாவது சூரியன் தென்பட்டால், உடனே ஓடித்தாயாரிடம் தெரிவிப்போம். தாயார் வந்து பார்க்குமுன் சூரியன் மறைந்துவிடும் தாயார் பட்டினி கிடப்பாள். "அக்கரையில்லை, இன்று நான் சாப்பிடக்கூடாதென்பது தெய்வசங்கல்பம்" என்று சொல்லி உற்சாகத்துடன் இருப்பாள். தாயார் நல்ல புத்திசாலி. சமஸ்தான விஷயங்களில்கூட விவேகப் பிரசங்கியுண்டு. அவளுடைய புத்தியைப்பற்றி ராஜ குடும்ப ஸ்திரீகள் வியந்து பேசுவார்கள். நான் குழந்தையாகையால் தாயைத் தொத்திக்கொண்டு செல்வேன். விதந்தவாய்ப் போன தாகூர் ராணி சாகபாவுடன் எனது தாயார் ஸமமாக சம்பாஷித்ததெல்லாம் என்னாபகத்தில் இருக்கிறது.

இப்படிப்பட்ட பெற்றோர்களின் வயிற்றில் நான் 1869-ம் வருஷம் அக்டோபர் 2-ந்தேதி ஸுதமபுரியில் பிறந்தேன். போர்பந்தரிலேயே என்னுடைய குழந்தைப் பருவத்தைக்கழித்தேன். ஏதோ ஒரு பள்ளிக்கூடத்தில் வைத்தது ஞாபகமிருக்கிறது. பெருக்கல் வாய்ப்பாடு கெட்டுருப் போடச் சொல்வார்கள், நான் அவதிப்படுவேன். மற்றப் பையன்களுடன் சேர்ந்து கொண்டு உபாத்தியாயரைத்திட்டத்தான் கற்றுக் கொண்டேன். அதைத்தவிர வேறெதுவும் எனக்கு அந்நாளைப்பற்றி ஞாபகமில்லை. என்னுடைய புத்தி மிகவும் மட்டமாகவும், ஞாபகம் பஞ்சையாகவும் இருக்கிறக்க வேண்டுமென்று இதிலிருந்து அனுமானிக்கிறேன். பாவம், என்னுடைய உபாத்தியாயரைப் பழித்து பாட்டுக் கவனம் செய்திருக்க வேண்டியதில்லை!

ஜப்பானிய குழந்தைகளின் விபரம்.

(இலுப்பையூர் ஸ்ரீமான் ராகையா எழுதுகிறார்)

ஜப்பானியர்களுக் குழந்தை ஒன்று பிரசவமாயின், பிரசவமான நாளிலிருந்து ஏழுநாட்களான பின்பு நாமமிடுகிறார்கள். வீட்டுத் தலைவர் ஒவ்வொருவரின் நாமமும், மலைகளும், ஆறு, குளம் முதலிய நாமங்களுள் ஒன்றையும் பெண்களுடைய நாமங்களுள் தகேகயம் கண்ணாகி வரத்தக்க கூடிய தங்கம், வெள்ளி, புஷ்பங்கள் முதலிய வஸ்துக்களின் நாமங்களையாகும். குழந்தைக்கு சரியாய் முப்பது நாளானவுடன் சுலோரோமத்தை வழித்தும் ஸ்னானம் செய்வித்த பின் சுத்தமான உடுப்புகளை அணியச் செய்தும், தாயானவள் குழந்தையை எடுத்துக் கொண்டு பலநாள் ஒன்றிற்கு சென்றும் வீட்டுத் தேவையான முவிலை, ஆகாரத்தின் பண்டங்களைக் கொண்டு பூஜித்து வணங்கி வழிபடுகிறார்கள். அதன் பின் உற்றார் உறவினரான சுற்றத்தாரிடங் சென்று குழந்தையைக் காண்பித்தும் அவ்வர்களால் கொடுக்கப்படும் பரிசு முதலான சாமான்களை பெற்றுக் கொள்ளுகிறார்கள். அதன் பின் நான்கு மாதங்களானவுடன் சந்தோஷகரமாய் வயது நூறுக்குமேல் ஜீவித்திருக்கக்கூடிய ஜீவப்பிராணிகளில் கொக்கு, ஆமை முதலிய இனங்களுடைய ரூபத்தோற்றங்களால் செய்து வைக்கப்பட்ட உடைகளை (வாலிபர்) நடுத்தர வயதுடையவர்களைப் போன்று குழந்தையை அலங்கரித்து அழகுபடுத்தி விடுகிறார்கள். அதன் பின் பதினோரு மாதங்களானவுடன் குழந்தைக்கு திருவிழா வேடிக்கைகளியாட்டங்கள் செய்தும் தேகங்களிலிருந்து வட்டக்குடுமிரோமம் எடுத்துவிடுகிறார்கள். குழந்தைகள் சிறுவயதாயிருக்கும் போது தாயானவள் குழந்தையின் கழுத்தில் தவிளையாசுரிதியும் முதுகின் மேல் குழந்தை கவிழ்ந்து கொண்டிருக்கும் முறையில் கயிறு கொண்டும் வழக்கமிருந்து வருகிறது. ஜப்பானியர்கள் ஏறுந்து நிற்கும் போது முழங்கால்கள் வெளியே முன்புறத்தில் விரிந்து கொண்டிருப்பதை நாம் அமோகமாய் காண்கிறோம். குழந்தைகளுக்கு ஜப்பானியப் பெண்கள் 2 வயதிலிருந்து 5 வருஷம் வரையில் பால்கொடுத்து வளர்க்கிறார்கள். ஆதலால் குழந்தையை [illegible]

(இதன் தொடர்பு 3ம் பக்கத்தில்)

No. 1.
பட்டணம் பொடி

உலகெங்கும் புகழ் பெற்று
24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற
மதராஸ்
என். வி. ஷண்முகம் கம்பெனியார்
பட்டணம் பொடி
காரம், மணம், குணம், நிறம், வாடை கபழ்கின்றன.
ஒவ்வொரு இந்தியரின் மனத்தையும் குதூகலிக்கச் செய்கிறது.
மாரிகாலத்துக்கு ஏற்றவாறு காரம் மணம் தரும்படி தயாரிக்கப்படுகிறது.

கந்தி வைராம்
'மூக்குத் தூள்'
தபால் பெட்டி
555
மதராஸ்.

தயாராகி வருகிறது!
தயாராகி வருகிறது!!
க்ஷத்திரியகுல சன்மார்க்க பூஷணம்.
ஸ்ரீமான் கே. எஸ். அருணகிரி நாடாரவர்கள் இயற்றியது.
தற்காலத்திய பல வர்ணமெட்டுகளை அனுசரித்து "திருக்குறள்" மேற்கோள்களுடன் சன்மார்க்க விஷயமாய்ப்பாடப்பெற்றது.
எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!! எதிர்பாருங்கள்!!!

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

(2-வது பக்கத்தொடர்ச்சி)

[illegible] விளையாடிக் [illegible] மயம் தலையைக் [illegible] ராயினிடத்திற் [illegible] கொண்டதுமு அல் [illegible] விடில் பல குழந்தைகள் [illegible] இவ்விதம் குழந்தைகளுக்கு [illegible] வகையில் [illegible] கருவறையது [illegible] பகலின் பாலை உபயோகிக்கவாலிருப்பதினாலேயே என்றும் சொல்லலாம். இவ்வழக்கம் [illegible] நாகரிகமுடைய [illegible] ஏற்பட்டதென்றாலும், தாய்க்கு [illegible] கருவுத்தாக்குரிய [illegible] ஏற்படுவதாலும் [illegible] கலை ஏற்படலாம். ஐப்பான் குழந்தைகளுக்கு வயது பதினாறு ஏற்படவேண்டி மணமாகுவதற்கு ஏற்றவன் என்றாய் கிடைத்து குழந்தையின் காமத்தை மாற்றியும், வட்டக் குஷி [illegible] ஏழிரத்தும் [illegible] பயனளிப்பேன் வந்து விடுகிறான். குழந்தைகளுக்கு நன்றாய் விபரம் தெரிந்து கொள்ளக்கூடிய வயது எற்பட்டவுடன் தாய் தந்தையர்களை பணிந்து வணங்கும் முறையை முதல் முதல் தெரிந்து கொள்ள வேண்டியது. குழந்தைகள் நாணடைவில் தந்தை தாய் தந்தையரை வணங்கி ஒழிபடும் பொருட்டு மிருக ஜாதி இனங்களுடன் பறவி ஜாதி இனங்களுள் தாய் தந்தையரின் கட்பிற்கு பிரதி உபகாரமாக கன்றி செலுத்திவருகின்ற காக்கை முதலான பறவிகளில் குணு குணுநியங்களை உவமான உவமேயமாக வெகு தெளிவுடன் கற்றுக் கொழுகிறார்கள். முற்காலத்தில் தாய் தந்தையர் பாட்டனார்கள் காலஞ் சென்றவுடன் தங்கள் சொண்டாவதற்காக ஏற்படுத்திய நாட்களுள் மணக்கோலம் செய்து கொண்டால் நூறு நாட்கள் வரை நிறையில் அடைத்து வைக்கும் வழக்கம் இருந்து வந்ததுடன் தங்கள் சொண்டாவிலில் ஜப்பானியன் கலாசாரத்தை கொண்டாடாமலிருப்பானையின் ஒருவருக்கும் வரையில் நிறையிலடைத்து வைக்குஞ் சட்டம் முற்காலத்திலிருந்தது. ஜப்பானில் தாய் தந்தையர்கள் தந்தம் புத்திரர்களுக்கு மணம் செய்து வைப்பதற்குமுன் அடியிற் கண்ட பிரதாம் புத்திமதி சொல்லிக்கொடுப்பார்கள்.

1 புத்திர! உன்னுடைய பெண்சாதியை சுய முயற்சியால் காப்பாற்றிக் கொள்ளக் கூடாதவரையில் மணம் செய்து கொள்ள ஆவல் கொள்ளக்கூடாது.

2. மணம் செய்து கொள்வதற்கு முன் பொது மனிருடன் கட்டுக்கோக்கு காதல் கொள்ளக் கூடாது. மணம் செய்து கொண்டபின் கொடுமையான இரணம், புண் முதலிய நோய்கள் உன்னுடைய பெண்சாதிக்குத் தாக்கக்கூடும்.

3. ஒரு விதத் தொழிலோ செய்து ஜீவிப்பதற்கு சோம்பல் கொண்டு பணக்காரருடைய புத்திரியை மணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஆவலுடன் பணக்கார வீட்டிற்குச் செல்லாதே (யோவிஹீ, யுருமிடோபாடே ஆரிமாஸான்) ஐப்பான் வாக்கியத்தின் சாராம்சமாவது:— மாமன் வீட்டுக்கு மருமகன் போகக்கூடாது. முகம் வாடும் என்பதே. (நந்தமிழ் மறை நூல்களிலும்காணலாம்) தான் எவ்வளவுகஷ்டமடைந்த போதிலும் மாமன் வீட்டை நோக்காதே. பெண்சாதியினுதவியை எதிர்பாராதே. இம்மணவுலவில் பெண்சாதியினுதவியைக் கொண்டு ஜீவிப்பவன் மனிதனல்லன் என்றும் காலிகளுக்குச் சமமாய் நினைப்பாயாக.

தாய் தந்தையரின் அபிப்பிராயப்படி மணம் செய்து கொண்ட பெண்ணினிடத்தில் அடியிற் கண்ட குற்றங்கள் காணப்படின் மனப்படி விலக்கிக் கொள்ளலாம்.

சொல்லுவார்த்தைகளைக் கேட்கா [illegible] பிறரைப்பற்றியபுகார் [illegible] தயவு வீட்டை [illegible] போலவது, செட் [illegible] இருப்பதுடன் பொரு [illegible] தனதுடைய புரு [illegible] வாலையாவது பொரு [illegible] செய்பவள், தாய் தந்தையர்களாலிருப்பவள், பெற்றோரிடம் அவற்ற [illegible] தொழிற்தக் சொல்லுவது, மெய்யே அடகரிக்க வல்லவள்

சொல்லுபவள், குழந்தை இல்லாதவளாயிருப்பின் மனப்படி விலக்கிக் கொள்ளலாம், அல்லது பெண்சாதியானவள் கற்றுணர்ந்தவளாயும் புருஷனுக்குப் பின் சந்ததி ஏற்பட வேண்டுமே என்ற எண்ணமிருந்து புருஷன் மணம் செய்து கொள்ளலாம் என்பதாய் அனுமதிப்பானேயாயின் மணம் செய்து கொள்ள வேண்டியது.

மணம் செய்து கொண்ட பின் பெண்சாதியானவள் உன்னுடைய சொல்லிற்கு மீறி ஒரு காரியத்தை செய்யுமாறு விட்டு விடாதே. அன்னவளிஷ்டப்படி நடந்து கொண்டால் பின் அன்னவளைத் திருத்த முயற்சிப்பது நாய் வாலை நிமிர்த்தப் பிரயாசைப்படுவது போலாகும். ஆதலால் புருஷருக்குரிய கம்பீர முறையில் இருந்து வரவேண்டும்.

ஏதாமொரு காரியத்தைச் செய்யுமாறு பெண்சாதியை தூண்டும்போது தன்னுடைய சகோதரிகளை எவ்விதம் இனிமையான குரலுடன் தூண்டுவாயோ அதே போல உன் பெண்சாதியையும் இனிய குரலுடன் தூண்டுவாயாக, அடிமை என்பதாய் நினையாதே.

பெண்சாதியினிடம் வார்த்தையாடும் போது இனிய குரலுடன் முகலக்ஷணங்கொண்டு வார்த்தை யாடுவதுடன் வெகு நாட்களாய் பிரிந்திருந்த நேசிதர்களைப் போல் கனிவுடனும் மேற்சொன்னபடி ஒருவர்க் கொருவர் வார்த்தையாடிக் கொள்ளவேண்டும்.

உன்னுடைய பெண்சாதி சோயால் தாக்குண்டிருப்பதேயாயின் அன்னவளுக்கு நிவிகை செய்தும் வைத்தியர்களைக் கூப்பிட்டு வருவதுடன் மருந்து முதலிய வஸ்துக்களை தானே பக்கத்திலிருந்து உட்கொள்ளச் செய்ய வேண்டும்.

காதலிவிளிட்தில் சிரித்து விளையாடியும் வார்த்தைகளாலுமேபோல் பெண்சாதியினிடம் சிரித்து விளையாடாமலிருப்பதுடன் சரீர சம்பந்தம் வைத்துக்கொள்ளும் போதுமட்டும் பெண்சாதி என நினைத்து சரீர சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டும். பகற் காலத்தில் சரீர சம்பந்தம் வைத்துக் கொள்ளக் கூடாது.

(தொடரும்)

பர்மாவில் நரபலி.

அடிமைத்தனத்தை ஒழிக்க முயற்சி.

பர்மாவின் மூன்று முக்கிய உத்தியோகஸ்தர்கள் ஹுலக்காலிய வலிக்கு அனுப்பி எல்லா அடிமைகளையும் விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சென்ற ஜனவரியில் கவர்னர் இந்தப் பிரதேசத்திற்குச் சென்று ஆம்பித்த கொண்டையை ஒட்டி இந்த யோசனை நடத்தப்பட்டிருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டார் இதை ஆங்கீகரித்து விட்டனர். அந்தப் பிரதேசத்தை விட்டவர விரும்புகிறவர்களுக்கு வெளியில் சாலபடிக்குகிலம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அடிமைகளை விடுவிக்க தாராளமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதால் அவர்களை வைத்திருப்பவர்கள் கஷ்டத்திற்குள்ளாக வேண்டியதில்லை. மிஸ்டர் ஜே. டி. வீ. மாஸ்வி இந்த கோஷ்டியின் தலைவராகச் செல்லுவார். அவர் முன்னதாகவே ஸ்தலத்திற்குச் சென்று எல்லாம் அறிந்து வந்திருக்கிறார். அவர் காலாவகுப்புத் தலைவர்களைச் சந்தித்து, அவர்கள் நரபலி கொடுக்கும் வழக்கத்தை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வெறுப்பதாகத் தெரிவிப்பார். நரபலியை நிறுத்துவதற்கு, அதற்கு மூலமாக உள்ள அடிமை வழக்கத்தையே நீக்கி விடுவதுதான் சரியானவழி என்று கவர்னர் தீர்மானித்திருக்கிறார் இப்போது பெர்னூர்டும் மற்றவர்களும் செல்லுவதின் மூலம் எல்லையின் இந்தப் பக்கத்திலிருந்து பலிக்கு ஆராயின் கிடைக்காதவாறு செய்யப்பட்டுவிடும் என்று நம்பப்படுகிறது. அடிமை தனம், நரபலி இரண்டையும் அடியோடு ஒழிக்க கவர்ன்மெண்டார் உறுதி கொண்டிருப்பதாக பொர்னூர்டு அவர்களுக்குத் தெரிவிப்பார். மிஸ்டர் ஜெ. டி. ஓ. பர்னூர்டு, மிஸ்டர் ஏ. டீ. போர்ட்டர், மிஸ்டர் டி. பி. எதவார் காப்டன் பிரேஸர், காப்டன் வேர்மான்முதலியோர்செல்லுவார்கள்.

மதிப்புரை.

தேசபக்தி விஜயம்.

வங்க நாட்டின் பக்த மிலரச் சிங்கமென எங்கும் புகழ்பெற்ற தேசபக்தி நிதாஞ்சனதால் அவர்கள் ஜீவிய சரித்திரம் ஒன்று கமது பார்வைக்கனுப்பப்பட்டிருக்கிறது. இதில் தலைபிறப்பு முதல் இறப்புவரையுமுள்ள எல்லாக் குறிப்புகளும் முறையாக எழுதப்பட்டிருக்கின்றன. அவருடைய மாலைத் தேச ஊழியமும் தரிய பிரங்கக் குறிப்புளும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. அவருடைய லாப வருவம், சற்றுத்தவர்ந்த பருவம், நிறை நீங்கிய தருணம், அவர் கும்பம், அவரிலம் நிங்கிய சமயம் ஆகிய ஐந்து படங்கள் புத்தகத்தோடிணைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்கள் யாவரும் வாங்கிப் படிக்கத்தக்கது. பொது ஜனபிரானிகளனைவரும் அவசியம் வாங்கிப்படிக்கத்தக்கது. இதன் விலை அணா 12

செந்தமிழ்ச் சிந்தாமணிப் புத்தகசாலை,
பெரியமெட், சென்னை

ஸ்வர்ணபாய் அல்லது இல்லற இன்பரகஸ்யம்.

இது தற்கால தர்மதாரமங்களை நன்கு விளக்கி நன்மை விளைவிக்கக் கூடிய ஒரு அருமையான காவல், இது திருசினாப்பள்ளி புத்தூர் ஆல் ஸெயிண்ட்ஸ் எஸ். பி. ஜி. டிரெய்னிங் பெண் படசாலைத் தலைமை உபாத்தினியான ஸ்ரீமதி அன்பம்மாள் பால் அவர்களால் எழுதப் பெற்றது.

தல்ல கினேன் கடிதம் 256 பக்கம் கொண்டது. விலை ரூ 1-4-0

இப்புத்தகத்தை மிக்க கவனமாய்ப் படித்துப் பார்த்தோம். கதாநாயகி சுவர்ணபாய் தானென்றாலும் அவளுடைய பலவீய சிகேகிதகானை சகுணபாய். பத்மாபாய் என இரண்டு பெண் மணிகளின் சரித்திரங்களையும் அந்தம் வரை சொந்தப்படுத்திக் கொண்டே போகிறது. உத்தமம், மத்திமம் அதமம் ஆகிய முக்குணத் தன்மைகளையும் மூன்று ஸ்திரீகள் மூலம் விளக்கியிருக்கிறதென்று சொல்லலாம், தற்காலம் படித்த பெண்கள் அதிலும் உத்தியோகஸ்தர்கள் வீட்டுப் பெண்கள் கடைபிடிக்கைகள் மிக்க விரிவாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. மேலும் மாமி மருமக்கள் கூத்து, அகம் பாவத்தால் வரும் பயன் முதலியவைகளால் பெண்கள் சாகசம் அனைத்தையும் விளக்கியிருக்கிறது. குடித்துக் குணங்கெட்ட ஆடவர்களுக்குரிய நீதியும் கூறப்பட்டிருக்கிறது.

கதை சுருக்கமான தென்றாலும் அங்கங்கே நீய காரியங்களால், நீய குணங்களால், நீய சேர்க்கையால் உண்டாகும் தீயவைகளை எல்லாம் நூலக்கி அவைகளுக் கெல்லாம் விமோசனங்களை விளக்கி அதனை முடித்துக் கொண்டே போவதால் கதை மிக நீண்டிருக்கிறது. மேலோக்காய் வாசிப்பவர்கள் இடமே கதையின் கால்தெரியாமல் விழிக்கலாம், ஊன்றிப் பார்த்தால் ஆசிரியரின் உண்ணோக்கம் அறியப்படும். கரும்பின் அடிப்பாகம்போல் கதையின் கடைசிப் பாகம் படிக்க மிக யினிப்பாயிருக்கும். சுவர்ணபாய் வீட்டில் பத்மாபாயும் அவள் புருஷனும் பிள்ளைகளும் சந்திப்பு மிக்க உருக்கமான காட்சியாயிருக்கும். கணவனும் குடிகாரத்தனத்தால் குணமிழந்தவனாயிருந்து குணமானான். உத்தம குணமுள்ள சுவர்ணபாய் நடத்தையும் அன்பும் எத்தன்மைத்துடைத் தென்பதை நம்காட்டுப் பெண்களெல்லாம் படித்தறியவேண்டியதே. இக்கதையில் பெண்கள் பிரன் தாபங்களை அதிகமாய் வந்துகொண்டிருந்தாலும் கேவலம் காமக்குரோதவேர்ப மதமார்ச்சலியங்களை மனத்துள் விளைவிக்கும் மற்ற நாவல்களைப் போலின்றி ஆண் பெண் இருபாலார்க்கும் பேதிக்கும் நீதி நூல் போல் காண்கிறது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் கல்வி, கேள்வி, அனுபோகங்களாலும் மிகுந்த பிரயாசையுடன் எழுதப்பட்டிருக்க வேண்டும், முக்கியமாய் நமது நாட்டு பெண்பாடசாலைகளில் நமது சிறுமிகள் கையில் இப்புத்தகம் இருக்கவேண்டுமென்று நம்புகின்றோம்.

நாடார் உலகமே!

நாடார் மகாஜன சங்கத்தின் இருப்பு நிலைமையைக் கவனிப்பாயாக.

(நாடார் மழியம் பிரகாசசபை பிரமிடெண்ட் ஸீமான் ப. வ. சோமசுந்தர நாடார் எழுதியிருப்பது)

நாடார்உலகம் சிறிது காலமாக பல துறைகளிலும் முன்னேற்றமின்றி விக்கம்பித்து கிடக்கிறது. சென்ற மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த ஜோதி மறைந்து விட்டது. காரணம் யாதென்று விசாரித்த அளவில் நடுவமாவ பலவிக கோக்கத்தோடு சங்கத்தில் சிலர் சேர்ந்துகொண்டு தங்கள் கோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளும் வரை பட்டோபமாய் ஆட்டம் செய்துவிட்டு பின்னர் மறைந்துவிடுவதே காரணமென்று சாற்றுகின்றனர். பல பொறுப்புள்ள உத்தியோகஸ்தர்கள் பெருக்காகமாட்டும் ஆவலத்திலமர்ந்து விட்டு அதற்குக்க ஆட்செய்ய முடியாததே காரணமென்றுங் கூறுகின்றனர். ஒரு சமயர் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை கூடும் கொண்வில் கூட்டத்திற்கு மட்டும் வந்து ஆசனத்திலமர்ந்து எழுந்து போய்விடுவதே தனது கடமையெனக் கொண்டிருக்கிறாராம். இதுதான் காரணமென்கின்றனர். மற்றும் பலர் சங்க கிர்வாக முறைகேற்றவாறு பொறுப்புள்ள விதானத்தில் தற்கமயம் வெளியேறி வேலை செய்யாதிருப்பதே காரணமென அறைகின்றனர். இவர்களது கோக்கம் இம்மட்டோடு நிற்கட்டும்; இனி எனது மனக்காட்டத்தை கவனிப்போம்.

நாடார் உலகம் தற்காலம் இருளடைந்துவிட்டதாகவே தெரிகிறது. எங்குதேடினுமும்ஜோதி நீலவக்காணோம், நாடார் உலகத்திற்கு உழைக்க எழுந்தவலியர் கூட்டத்தைக் காணோம். தொண்டர்களின் தொனி அடங்கிவிட்டது. ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர் பதவி ஆர்ப்பட்ட காலங்களில் கூறிய உறுதி மொழிகள் இருக்குமிடம் தெரியவில்லை, சென்னை சட்டசிருபசபை மெம்பர்கள் கூறிய வீர மொழிகள் எங்குற்றனவோ! கும்பகோணத்தில் கூடிவதாய் பறைசாற்றிய தஞ்சை நில்வர மகாநாட்டை காணோம், சொரூக்பிரங்களில் மிக்கும் நாடார்கள் தங்கள் இன்னல்களை ஒழித்தருளுமாறு வரும் விண்ணப்பங்களை நிறைவேற்றிக்கொடுக்க கிர்வாகஸ்தர்களைக் காணோம். ஆனால் பெயிருக்கிறது.

நான் இவ்வாறு கூறுவதற்கு பலர் வருத்தலாம், பலர் என்னை திட்டலாம். அவைகளை நான் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்கிறேன். உண்மையையும், சத்தியத்தையும், நீதியையும் நிலைநாட்டுவதே கமது கடமையாகும். ஒருவருடைய பிரீதிக்காகவும், தாட்சண்யத்திற்காகவும் அதர்ம வழியில் செல்வது விவேகமற்ற வேடதாரிகளின் செய்கையாகும். ஊழியர் நினைவுகளே!

சென்றதைக்குறித்து இனி விசனிப்பதில் எவ்வித பிரயோஜனமுமில்லை. ஆதலால் இனிமேலாக வேண்டியதைக் கவனிப்போம்.

சங்க கிர்வாகஸ்தர்களையும், அவர்களால் நடாத்தப்படும் கிர்வாகத்தையும் குறைகூறும் வேலையை விட்டு விட்டு அங்கத்தினர் பதவியை ஏற்று பணி ஏற்பதே முதல் வேலையாகும். வேலைசெய்வோர் ஒப்புகூறுவிட்டால் பட்டமோகம் கொண்டோர் பதவிகளை விட்டு விலகிவிடுவர்கள். அவர்களால் தொண்டேற்போர்க்கு எவ்வித இடைஞ்சல்களும் விகழாது. ஆதலால் நாடார் உலக க்ஷேமத்தில் நாட்டம்கொண்டோர் யாவரும் ஒருங்கு சேர்ந்து ஒத்துழைக்கும்படி விரும்பி வேண்டிக்கொள்கிறேன்.

எல்லாம்வல்ல இறைவன் அழிமானிகளுக்கு ஆதரவு அளிப்பானாகவும்.

வி, அனுபோகங்களாலும் மிகுந்த பிரயாசையுடன் எழுதப்பட்டிருக்க வேண்டும், முக்கியமாய் நமது நாட்டு பெண்பாடசாலைகளில் நமது சிறுமிகள் கையில் இப்புத்தகம் இருக்கவேண்டுமென்று நம்புகின்றோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்.

குரோதன வரு மார்கழி மீ ௴ உ

பிராமணரல்லாதார் எழுச்சி.

பாரதநாட்டிலுள்ள பிராமணரல்லாதாருக்குள் நீண்ட பத்து வருஷங்களாக ஒரு எழுச்சியுண்டாகிக் கொண்டு வந்திருக்கிறது. இவ்வெழுச்சி முதன் முதலாக சென்னை மாகாணத்திலே யுண்டாயது. ஸர். பி. தியாகராஜர், டி. எம். நாயர், ஸார்டெபென்டலண்டுமாகிய மும்மூர்த்திகள் அதன் கர்த்தர்களாவர். பின்னர் இதையொட்டி பம்பாயிலும் எழுச்சியேற்பட்டு வந்திருக்கிறது. மற்ற மாகாணங்களிலும் பரவிக்கொண்டிருக்கிறது. இதை அகில இந்தியமயமாக்கவேண்டுமென்ற கோக்கத்துடன் சென்ற வருடத்தில் பெல்காமில் மகாசபை ஆரம்பித்தது. இவ்வருடம் அமராவதியில் கூடக்கப்போகிறது. கடந்த சபைக்கு சென்னைவாசியில் ஒரு கனவான் தலைவரானார். நடக்கப்போகிற சபைக்கும் சென்னைவாசராஜாவே தலைவராகப் போகிறார். இன்னும் சிலர் முன் மகாராஷ்டிரத் தலைவரொருவர் சென்னையில்வந்து பிராமணரல்லாப் பிரிந்தா பத்தை விளைத்தார். நம்தேயத்துக்கும் இவ்குன்னவர்களை அழைத்தார். தற்போது பம்பாய் மாகாணத்தின் கல்விமந்திரி கனம் பி. வி. யாதவர் சென்னை மாகாணம் பிராமணரல்லாதார் 9-வது மகாநாட்டில் தலைமைவகித்து அரியதோர் பிரசங்கம் செய்திருக்கிறார். ஆரம்பத்தில் தனித்து நின்ற இச்சிறு இயக்கம் ஸ்வராஜ்ய வளர்ச்சி தற்போது அகில இந்தியப் பிரசினையாகவல்லதுகொண்டிருக்கிறது. உண்டானதற்கு தகுதியான காரணமிருக்கத்தான்வேண்டும். காரணமின்றிக் காரியம் நிகழாது.

இவ்வியக்கம்புதிதா அல்லதுபழமையாயுள்ளதா? இவ்வியக்கம்வேண்டியதுதானா? அதனால் நாட்டுக்கு நன்மையுண்டாவென்று பல கேள்விகளும் எதிர்ப்புகளுமேற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

எந்த சமூகத்திலாகட்டும் தேசத்திலாகட்டும் அகம்பாவமேலிட்டு மனிதஜாதிக்கே கேடானதாகக் நானுமொருநன்மையைக் கெடுப்பதற்கு ஈஸ்வர சங்கற்பமாய் ஒரு புதிய வியக்கமுண்டாவது சகஜமாயிருக்துவந்திருக்கிறது. அது புதிதாய் ஏற்படுவதுபோற் காணப்பட்டாலும், ஏட்டைப்புரட்டிப்பார்த்தால்இப் பழமையாகவே காண்கிறது. நம் நாட்டில் சரித்திரம் பக்தமாவ பல வியக்கங்களுண்டாகியிருக்கின்றன. முன்னையாய் புத்த-சமண-ஜைன்தவ--மகம்மதிய முதலிய இயக்கங்களெல்லாம் பிராமணரல்லாதவியக்கங்களே. அதன் எதிர்ப்புகளெல்லாம் பிராமணவியக்கமே. ஜைன்தவர்களையும் முஸல்மான்களையும் அவர்கள் (பிராமணர்கள்) தீண்டாதவர்களாகவேஒதுக்கி வந்தார்கள். பிட்டிஷ் அரசாங்கப் பரிபாலனமும் அவர்கள் சலுகையும் பெறவேண்டிய அவசியத்தை யுணர்ந்து ஜைன்தவர்களுக்கு கொஞ்சம் மதிப்புக்கொடுத்துவந்திருக்கிறார்கள். பிராமணரல்லாத வியக்கத்தால் தங்கராபத்தை யுணர்ந்து லோபத்திபக்தநிலைமானமிருப்பதாய்க் காட்டி முஸல்மான்களுக்கு சிறிது மரியாதை காட்டினார்கள். என்றாலும் இன்னும் பெரிய பட்டணங்களிலுள்ள பிராமணர் சாப்பாட்டு விந்திகளிலுங்கூட முஸல்மான்களுக்கு சாப்பாடு போடும் வழக்கமிருப்பதாகத் தெரியவில்லை. தற்போது இலாபத் பிரச்சினை நணிந்து போவதுபோற் காணப்படவே சுயராஜ்யக்கட்சியின் வாலை பிடித்துநுழைந்து தொங்கவாரம்பித்திருக்கிறார்கள். ஆகவே இவ்வியக்கமிப் பழமையான தென்பதுதான் பகரவேண்டும். மற்றக் கேள்விகளுக்கெல்லாம் கடந்த நன்மை, கடக்கும் நன்மை கடக்கப்போகிற நன்மைகளையே பதிலாக அறிந்து கொள்ளலாம்.

சென்னை பிராமணர்கள், தேசத்தில் அதிகச் செல்வாக்கியிருப்பது போல் காட்டிக்கொண்டு பிராமணரல்லாத வியக்கத்தைக் கொல்லப்பார்க்கிறார்கள்: உண்மையாகவே அவர்களுக்கு தேசத்தில் பிரத்தையிருக்குமானால் மகாத்மாகாந்தி சொன்னபடி கேட்டிருக்கவேண்டும்; அல்லது அச்சமூகத்தார் செய்துவரக்கூடிய அக்கிரமங்களை யாவது திருத்தியுடன் கண்டித்து கைவிட்டவர்களை காக்கும் வழி தேடவேண்டும். மாய்மாலத்தை மறந்துவிடவேண்டும். ஜனத்தில் குவிக்கவிடாமலும் நிலத்தில் மிதிக்கவிடாமலும் ஏழை ஜனங்களை ஹரிஜனத்து தடுத்துவரும் கொடுமைகளை இன்னும் சகித்திருக்க முடியுமா? அவர்கள் குறிக்கோளை யுணர்ந்து பிராமணரல்லாதாருடன் ராஜிக்குப் பிரயாசைப்படுவார்களாகில் இன்னும் காப்பாற்றப்படுவதற்கு காலமாகிவிடவில்லை; ஆகையால் சமூக வேற்றுமைகளை திருத்தி ஒழுங்குசெய்து மகாத்மா நிர்மாணத் திட்டங்களை அவர்கள் நிறைவேற்றுவார்களா?

பிராமணரல்லாத பிரமுகர்களும் பிராமணர்கள் துர்லக்ஷத்தால் துவேஷத்தைப் பெற்றுக்கொண்டிருப்பதுபோல் உள்ளத்துவேஷங்களால் இயக்கத்தை நசுக்க விட்டுவிடாமலும் இயக்கத்தின் தத்துவங்களை மறந்துவிடக் கூடாது. எதிர்ப்படை மிகச் சிறிதாயிருக்கலாம் அதன்பலம் மகா அதிகமென்பதை யுணர்ந்து துணைப்படைகளையும் முன்னணிகளையும் பின்னணிகளையும் பலமுள்ளதாயாக்கல்வேண்டும். பிராமணரும், பிறரும் பிராமணரல்லாதாருக்குள்ளும் பெருங் குறைகளையும் உடனே இன்னியென்றுமிடல்வேண்டும். இலதேல் சொற்பப் படையால் தோற்கடிக்கப்பட்டுப் போகுமென்பதிலும் சந்தேகமில்லை. இயக்கம் வளர்ந்தேவேண்டுமென்றால் தலைவர்கள் நிர்மல சித்தையுள்ள வீரர்களாய் விளங்குதல்வேண்டும். கதர் தீண்டாமையென்னும் முக்கியமாயுள்ள இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றினவர்களாய் இயக்கத்தின் முக்கிய அங்கமாகவும் சேர்த்துக்கொள்ளவேண்டும். மகாகனம் யாதவர், ஒற்றுமைப்படுங்கள்; பிராமணர்களின் தந்திரத்தை எதிர்க்க வேண்டியதிருக்கிறது; நாம் ஒற்றுமைப்படவேண்டும்; நம்மிடையே எல்லா வகுப்பினரும் மேல்ஜாதி, கீழ்ஜாதியென்று பாராமல் ஒற்றுமை பாராட்டல்வேண்டும் என்று கூறிய நன்மொழியை பிராமணரல்லாதார் யாவரும் கவனித்தலவசியம். அல்லது சட்டசபையில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி போன்றவர்கள் உங்களுக்குள் வித்தியாசமில்லையாவென்ற நேர்மிப் படங்களைத்தான் ஒப்புவிக்கக்கூடும். மேலும் பேரார் மகாகனத்தில் இவ்வியக்கத்தை நசுக்க கொலைராத்தனமாய் பிராமணரல்லாதபெரியோர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்களென்று கனம் யாதவர் சொன்னதையும், குவலயமெல்லாம் வெல்லுஞ் சூரனையாகினுங்கூடத் தவங்கள் வேண்டும்; குன்றாத செல்வவானாலும் அன்புள்ள ஞானவீரர் நட்பு வேண்டுமென்று பெரியோர்கள் சொல்லியிருப்பதையும் சிந்தித்துணரவேண்டும். 'எல்லோரும் சூத்திரர்கள்' என்றழைக்கப்படும் தோஷமும், அவர்கள் செய்பதி மோசமும் அறவே ஒழிய வேண்டுமென்றால் பிராமணரல்லாதாரியக்கமும் வேஷமாயிருக்கக் கூடாது. சத்தியம் நிறைந்துள்ளதாயிருத்தல் வேண்டும். சத்தியமே அன்பு. சத்தியமே கடவுள். சத்தியமே மோட்சம்—முத்தி. அதுவே சுவராஜுக்கு திருப்தி. அதுவே மனித வாழ்க்கையின் மர்மம். எல்லாம் வல்ல கடவுள் சிறுபையினுல நல்ல வியக்கங்கள்நாட்டில் குன்றாது நின்றுலவுவாக!

குரங்குகள் ஏகாதசி விரதமிருந்த கதை.

(தேவிதாசன் எழுதுகிறார்)

சேக மண்டலத்தைத் தொட்டுக்கொண்டு கிற்கும் காகலேர் தொடர்பில் வசிக்கும் செங்குரங்கு, வெண்குரங்கு, கருங் குரங்கு, வாலில்லாக் குரங்கு முதலிய பல வர்ணக் குரங்குகளெல்லாம் அம்மலையடிவாரத்திலுள்ள தென்னை, மா, பலா, வாழை, நாவல் முதலிய கனிவர்க்கங்கள் பழுத்திருக்கிற தேர்ப்பினிடையே வந்து வயிறு நிறையக் கனிகளை யுண்டு மாலைப் பொழுதில் மேல் மலைக்குச் செல்லுங்குகையில் அக்கட்டத்திலுள்ள ஒரு தடிக் குரங்கும் ஒரு ராமக் குரங்கும் தனித்து நின்று கனவு வரப்போகிற ஏகாதசி யன்று கம்பினங்களெல்லாம் மோட்சமடைய வேண்டி விரத மிருக்க வேண்டுமென்று முடிவு செய்து மற்றக் குரங்குகளின் கருத்தை பெறுவதற்காக அன்றிரவு மலை மேட்டில் ஒரு மகாநாடு கூடவேதாகத் தீர்மானித்து தகல வர்களுக்கு குரங்குகளையும் வரவேண்டுமென்று அதன் தலைமைக் குரங்குகள் மூலம் சொல்லியனுப்பப்பட்டது.

இதைக் கேட்ட குரங்குகளில் இரேதப்பர்! புது விரேதமாயிருக்கிறது. மலை மேடாம், மகாநாடாம், ஏகாதசி விரதமென்றும் பட்டம், எல்லோருக்கும் மோட்ச வீடாம், குரங்குகளுக் கெல்லாம் வேடாம் என்று ஒரு குரங்கு சொல்ல மற்றொரு குரங்கு ஆட போடா! இது என்னமோ மாயமாயிருக்கிறது. நாமக் குரங்கும் தடிக் குரங்கும் நம்மை என்ன இழிவில் இழுத்து விடப்போகிறார்களோ தெரியவில்லை. முன்னம் வாலி, சுக்கீவன் காலத்தில் வடக்கே இருந்து வந்தான் ஒரு தடிராமன். அவன் பெண்ணை இராவணன் தூக்கிச் சென்றதை பீடிப்பதற்காக நம்மினங்களையெல்லாம் கூட்டிப்போய் சாவக் கொடுத்து இழவு கொடுத்து பெண்ணை இட்டுவந்தான். அப்போது அனுமன், அங்கதன், சாம்புவன் முதலிய நம்மவர்கள் ராம் ராம் ராம் ராம் என்றால் மோட்சக்கேட்கெல்லாம் கிடைக்குமென்று தான் கூத்தாடினார்கள். இப்போதும் நம் தடிராமனிருவர்களும் ஏகாதசி விரத மிருக்க வேணுமென்கிறார்களாம். முன்னர் இராவணன் சண்டையில் கஷ்டப்பட்டாலும் பலன் கைமேற் கிடைத்ததாகக் கதையிருக்கிறது. வாலி தொலைந்தான், சுக்கீவன் சுகித்தான், அனுமான் சிரஞ்சீவியானான்னுவதை கேட்டுப் பழுமேரும். இந்தத் தடிராமன்கள் ஏகாதசி விரதமிருந்து என்ன பலனை யடையப்போகிறார்களென்று தெரியவில்லையே, என்றும் பலவாறு பேசிக்கொண்டே கூட்டத்தை நோக்கி குரங்குகளெல்லாம் வந்துகொண்டிருக்கும்போது ஒரு குட்டிக் குரங்கு மார்தட்டிக் குதித்து நின்று கொண்டு 'அட அப்பன்கள் நாம் மாக்துபோகப்படாது. கூட்டம் கூடுவதற்கு முன்பே மோச முண்டா? முன்னைப் போல், இப்போ தெங்கேனும் சண்டை கிண்டை நடக்கிறதா? அல்லது கொஞ்ச நாளைக்கு முன்புநம் [illegible] யரை யெல்லாம் வெண்சேர்சாமியிடிப்பித்து கப்லேற்றுகிறதாகக் கேள்விப் பட்டேமே அப்படி ஏதேனும் குதிருக்குமா? வென்று தெரிந்துகொள்ள வேண்டும். தடிராமன்களை சம்மாலிடக் கூடா, தென்று சொல்லவே மற்றொரு குரங்கு 'அட போடா இப்படித் தான் முன்னுவாய் ஏகாதராமனைக் கண்டவுடன் வாலை [illegible] விடுவாய். அவனைத் தூக்கிக்கொண்டு [illegible] பாய் என்றது. [illegible] அதெல்லாம் உக்கப்பன் [illegible] ஆச்சா மலையேறி விட்டால் [illegible] ஏமாற்ற முடியாது' என்றது. [illegible] மெருகு காமக் குரங்கு [illegible] [illegible] [illegible]

குட்டி:—நாளைக்கே நாமெல்லாம் செத்துப் போகவா? அப்பத்தானே மோட்சம்.

தடி:— பையன்! உலக்கனுபோக மில்லை.

குட்டி:—செத்தனுபோகமா?

தடி:—பையன் வாயடக்கு.

குட்டி:—வாலாட்டாதீர்.

ஊமைக்குரங்கு:— உம் உம் என்று வாயாலும் கையாலும் சமிக்கை செய்து வையனை அடக்கி கட்டாரவத்துலிட்டு காகோஷமிடவே எல்லாம் நாகோஷமிட்டன.

ராமக் குரங்கு புன் சிரிப்புடன் மெதுவா யெழுந்து தன் நீட்ட வாலைத் தானே உயர்த்தி ஆசனமாயமைத்துத் மேலுட்கார்ந்து கொண்டு தமது கவனத்தை திறந்தேதோ சொல்லுமுன் குட்டிக் குரங்கு இதென்ன இராமனின் சவுரியமென்று பார்த்துச் சொல்லிக் கொண்டே தானும் தன் வாலைச் சுருட்டியதன் மேலுட்கார்ந்து கொண்டது. மற்றக் குரங்குகளும் அப்படியே செய்து [illegible]

[illegible] லவருக்கு மரியாதை கா[illegible]

[illegible] சகோதரத்வம் [illegible]

தடி:—ஆட்சேபனை யில்லை.

குட்டி:—ஏன் ஆட்சேபிக்கிறீர்?

தடி:—[illegible]லைமைக்குத் தாழ்ந்திருப்ப[illegible]

[illegible] புரிந்தில்லை. [illegible]

[illegible] தலையிலாவது [illegible]

[illegible] அவருக்கு [illegible]

குட்டி:—[illegible] அவமானப் [illegible] மக்கு நுவல் பெரி[illegible] நிதாயுக்குகும் போ[illegible] மக்குப் பேசத் தெரியாதென்றே [illegible]

தடி:—[illegible]லையிலிருந்தால் குறைந்[illegible]

குட்டி:—[illegible] மேலிருந்தால் [illegible] அவர் மனம் சரிக்குமா?

குட்டி:— அவ்வளவு சலிப்பில்லாத் [illegible] கமக்கு வேண்டாம். அவர் உயர வேண்டுமென்பதையும் ஒப்புக்கொள்ள முடியாது. மானிடராய் பிறந்தும் [illegible]யர்களாய் சிலரை பல்லக்கேறிப் பவனியாகக் கூடாதென்றும், குடை பிடிக்கக் கூடாதென்றும், பாதரட்சை தரிக்கக் கூடாதென்றும், இன்னும் குளத்திலிறங்கக் கூடாது, கோயிலில் நுழையக் கூடாது, தெருவில் நடக்கக் கூடாது, நின்னையிருக்கக் கூடாது, நல்ல வஸ்திரந் தரிக்கவும், நல்ல சால்ஜாம் படிக்கவும் கூடாதென்று நடுத்து ஒடுக்குவதைப் போலிருக்கிறது நீர் பேசுவது. கற்றறி மூடர்களும் பார்த்துக் கொண்டிருப்பது போலிருக்கிறது நீர் பேசுவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் ராமக் குரங்கின் மனப்பான்மை யென்று குட்டிக் குரங்கு சொர்ச்சித்துப் பேசவே மற்றக் குரங்குகளும் [illegible]தை விடைத்து ரோமஞ்சிலிர்த்து கத்தவாரம் பித்தன.

கிழக் குரங்கு:— குழப்பத்தை யடக்கி எல்லோரும் அவரவர் வாலை மடக்கியதன் மேலமர்ந்திருக்கலாம். இருந்தாலும் ராமக் குரங்கின் வால் பெரியதாகையால் மற்றவைகளுக் [illegible] சற்றுயரமாய்த்தான் தோன்றும் அவ்வபராதம் போராதென்றோ நடிக் குரங்கின் தோள்மேலேறி [illegible] வேண்டியது தான். (சிரிப்பும் காகோஷமும்)

நடிக் குரங்கு:— (தலையைத்துக் கொண்டே உள்ளெரிச்சலைக் காட்டாமல் புன்முறுவலாய் ராமக் குரங்கை நெருங்கி காதைக் கடித்தது)

ராமக் குரங்கு:— நீங்கள் பேசியதெல்லாம் என்னோர்க்கறியாமல் பேசிவிட்டீர்கள் பரவாயில்லை. தெக்குரங்கு சொன்னது சரியென்று சொல்லி வருகையில்,

குட்டி:—நடிக் குரங்கின் முதுகின் மேலா—?சிரிப்பு.

ராமக் குரங்கு:—இல்லை. சமத்வமாய் அவரவாசனத்தின் மேலமருவ தேநீண்ட (காகோஷம்)

அதனதன் ஆசனத்தமர்ந்து தலைவர் முகவுரை படிக்கப் போகிறார்.

(இன்னும் வரும்)

சென்னை சட்டசபை.

முக்கிய நடபடிக்கைகள்.

(14—12—25)

இன்று காலை 11 மணிக்கு கனம் எம். சத்தியமூர்த்தி அவர்களின் அக்கிராசனத்திக்கீழ் சென்னை சட்டசபை கூடியது. ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர்வர்கள் மந்திரியின் பிரயாணச் செலவு இதுவரையும் எவ்வளவு என்று கேட்ட கேள்விக்கு கனம் பனக்கால் ராஜா பதில் அளித்ததாவது:—இதுவரையும் மொத்த பிரயாணச்செலவு ரூ 40077-10-9 வரவிருந்தெழில் கனம் பனக்கால் ராஜாவிற்கு ரூபாய் 12353-12-0, ஸ். பாத்மேலிற்கு ரூ 6693-5-0 திவான்பகதூர் சிலஞானம் பிள்ளைக்கு 10426-9-9.

சட்டசபையை ஒத்திவைக்கப் பிரேரணை.

சென்னை முனிஸிபல் தேர்தலில் தோல்வியடைந்த ஸ்ரீமான் தணிகாசலம் செட்டியாரை கார்பொரேஷன் அங்கத்தினராக நியமனம் செய்தது அதிகாரத்தைத் தவறாய்ப் பிரயோகம் செய்ததாகவும், ஸ்தல சுயஆட்சி நிர்வாகத்தை அவமதிப்புக்குட்படுத்தியதாகவும் இருக்கிறதென்று அவசர விஷயத்தைப்பற்றி விவாதிப்பதற்காக சட்டசபையில் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டுமென்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் பிரேரணை செய்தார்.

அக்கிராசனர்:—இது முக்கிய விஷயமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் இது அவசர விஷயமென்று எனக்குத் திருப்திசெய்து வைக்கவேண்டும். ஆனாலும் அவருடைய நியமனத்தை இனி ரத்துசெய்யமுடியுமாவென்று கேட்டார்.

சத்தியமூர்த்தி அய்யர்:—இத்தீர்மானம் நிறைவேறினால் ஸ்ரீமான் தணிகாசலம் செட்டியார் தானாகவே ராஜினாமாச் செய்தாலும் செய்துவிடலாம். இவ்வாறு சிறிது விவாதித்துப் பின் அக்கிராசனர் இது ஒரு அவசர விஷயமில்லை என்று அனுமதிக்க மறுத்துவிட்டார்.

ஒத்திவைக்க மற்றொரு பிரேரணை.

கல்பாத்தியில் தேருற்சவகாலத்தில் ஈழுவர்கள் சில வீதிகளில் பிரசங்கிக்க முடியாதபடி தடையுத்தரவு பிறப்பித்ததொர்கையைப்பற்றி விவாதிப்பதற்கு சட்டசபையின் இதர நடவடிக்கையை ஒத்திவைக்கவேண்டுமென்று ஸ்ரீமான் எம். கிருஷ்ண நாயர் பிரேரணை கொண்டுவந்தார். இதுவும் அனுமதிக்கப்படவில்லை.

அனுதாபம்.

அலெக்ஸாந்திரா மகாராணியின் மரணத்திற்கு மிகவும் வருந்துவதாக மாகறிமை தலைவர் சக்கிரவர்த்திக்குத் தெரிவித்துக்கொள்ளக் குறிப்பிட்ட தீர்மானத்தை ஸ்ரீமான் வி. பி. இராமசாமி அய்யர் பிரேரணைசெய்து நிறைவேறினார். அதை ஆதரித்து கனம் பனக்கால் இராஜா பேசவும் சபையினர் எழுந்து நின்று தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

தேவஸ்தானச்சட்ட திருத்தமசோதா.

இந்த மசோதாவைக் கொண்டுவர அனுமதிகோரப் பேரவுதாக ஸ்ரீமான் வி. வி. வெங்கட்டரமணய்யங்கார்அறிவித்திருந்தார். ஆனால் இது சம்பந்தமான பூரா தகவல்களும் இன்னும் கிடைக்காததால் அடுத்த கூட்டத்தில் இதைப் பிரேரணை செய்வதாகத் தெரிவித்துக்கொண்டார். சபையினர் அனுமதி கொடுத்தனர்.

லோகல்போர்டு சட்டத்திருத்த மசோதா.

1920-ம் வருஷத்திய லோகல்போர்டுகள் சட்டத்தைத் திருத்துவதற்கு ஒரு மசோதாவைக் கொண்டுவந்து அவைத் சபையில் படிக்கவேண்டுமென்று ஸ்ரீமான் ஆர். வீரய்யன் பிரேரணை செய்து பேசுகையில், காகிநாடாவில் நடந்ததில் இந்தமை மசோதாவைக் கொண்டுவர அனுமதியளிப்பதென்றும் ஆனால் சென்னிந்தியாவில் தாழ்ந்த வகுப்பினரெனக் கருதப்படுவோர் மிகவும் கேவலமாக நடத்தப்படுவதாலேயே இந்த மசோதாவைக் கொண்டுவர நேர்ந்ததென்றும், இந்தமசோதாவைச் சட்டமாக நிறைவேற்றுவதினால் மானம் இழந்விடாதென்றும் இந்தியாவின் ஜனத்தொகையில் ஆதிலொரு பாகத்தினரை, தாழ்த்தினவர்கிருக்கும் வரையில் சுயராஜ்யம் கேட்பதுவெறும் பேச்சுத்தானென்றும். இந்த சபையிலுள்ள எல்லாக் கட்சியினரும் தாழ்ந்த வகுப்பினரின் பரிதாபமான நிலைமையில் அனுதாபம் வைத்து மசோதாவை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்வதாகவும் சொன்னார்.

கனம்பனக்கால் ராஜா

பேசுகையில் தாழ்ந்த வகுப்பினருடைய குறைகளில் தமக்கு அனுதாபம் உண்டென்றும், தவறாமல் அந்த நிலையில் வைத்திருப்பது அவமானகரமானதென்றும் அவர்களுடைய நிலைமையை உயர்த்த வேண்டுமென்றும் ஆனால் இந்தச் சட்டமை சட்டமியற்றுவதினால் குறை நிவர்த்தியாகுமாவென்பது சந்தேகமென்றும் எனினும் தனிக்கமிட்டிக்கு மசோதாவை அனுப்ப சம்மதமென்றும் சொன்னார்.

மசோதாவின் நோக்கம்.

சட்ட பூர்வமாக ஏர்த பப்ளிக் ரஸ்தாவிலாவது, தெருவிலாவது, பாதையிலாவது செல்வதை எவரும் தடுக்கக்கூடாது என்றும் பப்ளிக் மார்கெட்கள் எல்லா ஜாதியாருக்கும் பொதுவாக இருக்கவேண்டுமென்றும், இவைகளை எவரும் உபயோகிக்கமுடியாமல் தடுப்பவர் குற்றம் சாட்டப்படுவதற்காகாக 100 ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படலாமென்றும் லோகல்போர்டுகள் சட்டத்தில் புகுத்துவது இந்தமசோதாவின் நோக்கமாகும்.

ஸ்ரீமான் கிருஷ்ணராவ்.

பேசுகையில் மசோதாவின் நோக்கத்தில் தமக்கு அனுதாபமுண்டென்றும், ஆனால் சில இடங்களில் சில வகுப்பினருக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் வினந்தரை வேறுவகுப்பினர்உபயோகிக்கச் சம்மதிப்பதால் சங்கடமேற்படுமென்றும், தண்டனை சாதாரணச்சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டிருக்கையில் இச்சட்டத்தின்கீழ் தண்டனைவிதிப்பது உசிதமாகாதென்றும் இந்த அம்சங்களை தனிக்கமிட்டி கவனிக்கவேண்டுமென்றும் சொன்னார்.

ஸ்ரீமான் எம். கிருஷ்ணநாயர் பிரேரணையை ஆதரித்துப்பேசினார்.

ஸர் கே. வி. ரெட்டி.

பேசுகையில் கோவிலுக்குள் போகக் கூட தாழ்ந்த வகுப்பினருக்கு சுதந்திரம் கொடுக்கவேண்டுமென்று மசோதாவில் சொல்லியிருந்தால் நமக்குத் திருப்திகரமாக இருக்குமென்றும் வெகுகாலமாக தாழ்ந்திருக்கும் தாழ்ந்தவகுப்பினரை முன்னுக்குக்கொண்டு வாராவிடில் தென்னாப்பிரிக்காவில் நம்மவருக்கு சம உரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்க நமக்கு உரிமையிராதென்றும் சொன்னார்.

ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி.

பேசுகையில் ஸ்ரீமான் ரெட்டி பேசியதை உத்தேசித்துத் தாம் பதிலளிக்கவேண்டியிருக்கிறதென்றும் இந்த மசோதாவை நிறைவேற்றினால் வெகுகாலமாகத் தாழ்த்தப்பட்டு வைக்கப்பட்டிருப்போருடைய கஷ்டங்கள் நீங்கிவிடுமென்றும் ஸ்ரீமான் ரெட்டி இருந்தாலும் கம்பிக்கை மகிழ்ச்சிகரமானதென்றும். சட்டங்கள் அதைச் செய்துவிடமுடியாதென்றும் ஜஸ்டிஸ்கட்சியில் ஜாவா செல்வர் நப்பெற்றுவருக் ஸ்ரீமான் கே. வி. ரெட்டி அக்கட்சியாருகுத் தாழ்ந்த வகுப்பினரிடத்தில் அனுதாபமுண்டாகும்படி தாம் கேட்டுக்கொள்வதாகவும் சொல்லி வரவேயில் வர் கே. வி. ரெட்டி குழுக்கட்டு பிராமணர்கள் தான் தாழ்ந்த வகுப்பினரைக் கேவலமாக நடத்துகிறார்களென்றும் அவர்கள் ஸ்ரீமான் எம். சத்தியமூர்த்தி திருநாகேஸ்வரமென்றும் சொன்னார். ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி பதிலளிக்கையில் பிராமணர்களைவிட உயர்தர பிராமணரல்லாதார் தாழ்ந்த வகுப்பினரைக் கேவலமாக நடத்தி வருகிறார்களென்றும் பிராமணர்களுக்கு தாழ்ந்தவகுப்பினரைக் கேவலமாகநடாத்த அதிகப் பிரியமேயே கிடையாதென்றும் தாழ்ந்தவகுப்பினர்களை பிராமணர்களைவிட பிராமணரல்லாதாரே கொடுமையாக நடத்தி வருகிறார்களென்றும், தாழ்ந்த வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக ஏற்பட்டிருக்கும் ஸத்தியோதயசபையில் பெரும்பாலோர் பிராமணரல்லாதாரே இருந்து தாழ்ந்த வகுப்பினருக்காக உழைத்து வருகிறார்களென்றும், தாழ்ந்தவகுப்பினர் முன்னேற்றமடையப் பிராமணரல்லாதாரை விடப்பிராமணர்களே அதிகப்பொருளுதவி செய்து வருகிறார்களென்றும் தாழ்ந்தவகுப்பினருக்காக இன்அபரிது பேசும் ஸர் கே. வி. ரெட்டி தாழ்ந்த வகுப்பினருக்காக இதுவரையில் அவருடைய ஜில்லாவில் தாங்கள் செய்வதென்ன? அதிகமாக என்ன செய்திருக்கிறோமென்று தெரிய வேண்டுமென்றும், அவருடைய கட்சி தாழ்ந்த வகுப்பினருகு என்ன செய்து வருகிறதென்பது தெரிந்ததுதானென்றும், குடிக்க அவர்கள் உதவி செய்து அவர்களைப் பாழ்படுத்தி வருகிறார்களென்றும் அன்பின் பேரிலேயே தாழ்ந்த வகுப்பினருக்கு சுயாதீனமை கொடுக்கும்படி சொல்ல வேண்டுமென்றும், ஜாதித்துவேஷத்தைக் இனப்பி விடினினுல் தாழ்ந்த வகுப்பினரின் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாதென்றும். இந்தியாவில் தாழ்ந்த வகுப்பினரைக் கேவலமாக நடத்துவதால் தென்னாப்பிரிக்காவில் நம்மவருக்குச் சம உரிமை கேட்கக் கூடாதென்று ஸ்ரீமான் கே. வி. ரெட்டி சொல்லியதைத் தாம் ஒப்புக் கொள்ள முடியாதென்றும் சொன்னார்.

(15—12—25)

அபேக்ஷகர் தடை.

லோகல்போர்டு ஸ்தானங்களுக்குத் கர்னங்கள். அபேஷகர்களாக நிற்க முடியாமல் இருந்துவரும் நிர்பந்தத்தை நிவர்த்திசெய்வதற்காக லோகல் போர்டு சட்டத்தை திருத்தும் மசோதாவை முதல்தடவை சபையில் படிக்கவேண்டுமென்று ஸ்ரீமான் ஜி. ராமேசுவரராவ்கொண்டுவந்த பிரேரணையின் பேரில் விவாதம் ஆரம்பிக்கப்பட்டது. நீண்ட விவாதத்தின் இறுதியில் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு தோற்றுப்போய்விட்டது.

மரத் தீர்வை.

ஸ்ரீமான் பி. டி. ராஜன் இல்லாதால் அவர் பெயராலிருந்த அடியிற்கண்ட தீர்மானத்தை சட்டசபை அலுவலியின் பேரில் ஸ்ரீமான் எம். ஆர். சேதுரத்தினமய்யர் பிரேரணை செய்தார்.

மரத்தீர்வையைப் பூர்வலிதெத்திற்கு இறக்கிவிட்டு 11-8-21 ல் உள்ளபிலிலிரு பேரில் உத்தரவை ரத்து செய்துவிடவேண்டும்.

இத்தீர்மானம் சிறுவிவாதிக்கப்பட்டபின் நிறைவேறிவிட்டது.

(தொடரும்)

திருத்தம்.

14-12-25 ல் வெளியான கம் மித்திரனில் 3-வது பக்கத்தில் சர்க்கிள் ஆபீஸர் அவர்களின் சுற்றுப்பிரயாணம் என்ற தலைப்பின் கீழ்க்கண்டதாய் சங்கத்தின் பிரதாபர் ஸ்ரீமான் மா. உ. சு. குருசாமி நாடார் அவர்கள் என்றிருப்பதை நம் தாய் சங்கத்தின் வருணவிவர் மா. உ. சு. குருசாமி நாடார் என்று திருத்தி வாசிக்கவும். (ப-ர்)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

உயர்தரப்பெண் கல்வியும், மேல்நாட்டு நாகரீகத் திலினையும்.

கலித்துவாழ விரும்பும் கனவான்களுக்கு சில புத்திமதிகள்.

(டாக்டர் ஜாப் டானியல் எழுதியிருப்பு)

நவீன காலத்துப் பெண்ணிடம் எச்சரிக்கையாயிருங்கள். அவள் ஒன்றுக்கும் உதவாதவள். மேனாட்டார்ன் கடை, யுடை, பாவனைகளிலும், கல்வியிலும் தேர்ச்சி யடைந்த அப்பெண் நம்மனைவ தேசநாகரீகத்திற்கும், நமமுடைய வீட்டு வாழ்க்கைக்கும் தகுந்தவளாக மாட்டாள்.

தேக காந்தியும் ரூபலாவண்யமும் மிகுந்த பெண்ணென்று எமாறவேண்டாம். அவள் சமயலறையை எட்டிப் பாராமல், தன்னை அலங்கரித்துக் கொள்வதிலும், தனக்கு வேண்டியதை முதலிற் செய்து கொள்வதிலும் தன் கவனத்தைச் செலுத்தி அதன் பின்னர் தன் புருஷனைக் கவனிப்பாள்.

தனவந்தர் வீட்டுப் பெண்ணிடம் ஜாக்கிரதை! பிரக்கும் பொழுதே வெள்ளிக் கரண்டியை வாயில் வைத்துக் கொண்டிருக்கும். அப்பெண் தாதி மார்களுடன் வண்டியில் போவதைக் கண்ட அவளுடைய கற்றத்தார் அப்பெண்ணைக் கொண்டாடி யிருப்பார்கள். அவள் சொன்னபடி புருஷன் ஆட வேண்டும். நீங்கள் அவள் கையில் அகப்பட்ட பொம்மை போலாவீர்கள்.

கல்வி மிகுந்த பெண்ணென்று மயங்க வேண்டாம்! அவள் வாழ்நாள் முழுவதும் மேனாட்டுக் கல்வியையும் நாகரீகத்தையும் தழுவுதல் மெலனிந்து, ஐரோப்பிய பட்டங்கள் பெறுதலிலும், ஸ்திரீகள் புருஷருக்கு சமமான தகுதியுடையவராக ஆகவேண்டி ஸ்திரீகள் சங்கத்தில் கலந்து வாதம் புரிவதிலும் தன் காலத்தை வீணாக்கும் இப்பெண்ணை உங்களைத் தன் கணவனாக நினைத்த ஒருகுமரன்!

இப்படிப்பட்ட பெண்களிலா உங்கள் மனைவியரைத் தேர்ந்தெடுக்கப் போகிறீர்? அவள் படித்த பாட்டிகளுடன் தாளம் போட்டுக் கொண்டும் ஆடிக்கொண்டும் இருக்கவேண்டியதுதான். உங்கள் மனம் அவளுக்கு அடிமைப்பட்டிருக்கும். அவள் உங்கள் மனைவி என்ற பாத்தியதை நியாயஸ்தலம் மூலமாவே ஸ்தாபிக்க நேரிடும்.

ஆகையால் நவீன காலத்துப் பெண்களைப் பற்றி ஜாக்கிறதையுள்ளவர்களாயிருங்கள்.

மதுரை.

(நமது நிருபரிடமிருந்து.)

மதுரை 17—12—25

காலநிலை:—இரண்டு நாளாக மழை விடையாது. ஆகாயம் மப்பும் மந்தாரமுமாயிருக்கிறது. இரவில் பனி சாண்டியாக விழுகிறது. வைகையிலும் ஜலம் பேய்க்கொண்டிருக்கிறது.

தலைக்கட்டுவரிக்கமிட்டி:—திருமங்கலத்தில் தலைக்கட்டுவரி வசூல் செய்வதற்காக கமிட்டியார் புறப்பட்டுச் சென்ற விபரத்தை ஏற்கனவே நம்மித்திரனில் அறிவித்திருக்கிறோம். சென்று கேட்டதில் மார்கழி மீ 4உ யன்று வந்தால் வசூலித்து கொடுத்து விடுவதாக அவ்வூர் தலைவர்கள் சொல்லியனுப்பியிருக்கிறார்களென்று அறிகிறோம். நாளது மார்கழி மீ 4உ கமிட்டியார் சுணக்காமல் புறப்பட்டுச் செல்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாலிப நாடார்சங்கம்:—இச்சங்கம் திருவாரூரை பொதுக்கூட்டம் நாளது கார்த்திகை மீ 18உ இரவு பத்துமணிக்கு மதுரை தனலெக்ஷிமி லாடஜில் ஸ்ரீமான் வ. மா. முத்துராமிலிங்கம் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அங்கத்தினர் யாவரும் விஜயஞ்செய்திருந்தார்கள்.

இந்து நாடார் மஹாஜன சபை, இரங்கூன்.

சென்ற கார்த்திகை மீ 29—ம்தேதி வெளிவந்த மித்திரனில் பொது நலப் பிரியன் என்னும் ஓர் நிருபர் மேற்கொண்ட சபையின் வரவு செலவு கணக்குகளை பொதுஜனங்கள் அறியும் வண்ணம் வெளியிடும்படி அதன் தலைவர்களைக் கேட்டிருக்கிறார். வெளியிட வேண்டியதுதான்; இதை மறுப்பார் ஒருவருமில்லை. ஆனால்நமது பொதுநலப்பிரியன் நாடார்மஹாஜன சங்கத்தின் இரண்டாவது வருட வரவுக்கொண்டாட்ட வருவின் நிலைமை மேற்படி சங்கத்தின் பர்மாக் கிளைச்சபையின் ரூபாய்கள் இவைகள் சம்பந்தமாக ஒன்றுமே சொல்லாமல் விலித்து இந்த நாடார்மஹாஜனசபையின் வரவு செலவு கணக்குகளை மட்டும் வெளியிடும்படி வேண்டிக்கொள்வதுதான் நமக்கு ஆச்சரியமாய் இருக்கிறது.

நான் இந்த நாடார்மஹாஜனசபையின் வரவு செலவு கணக்குகளை பொதுஜனங்கள் அறியும் வண்ணம் அச்சிட்டு வெளியிடும்படி சென்ற ஆடி மீ சபையின் பிரதமதலைவர் ஸ்ரீமான் வை. மு. முத்துக்குமாரு நாடார் அவர்களிடம் நேரில் தெரிவித்ததில் தலைவர்களுக்கிருக்கும் பல அலுவல்களின் நிமித்தம் இவ்விஷயம் சாத்யப்படாமலே இருந்து வருகிறதென்றும் சபையின் கணக்குகளெல்லாம் தயாராய் இருக்கின்றன வென்றும் தெரிகிறது. நாளம் பத்திராதிபரவர்கள் குறிப்பிடுகிறபடி நமது பொது நலப்பிரியன் தலைவர்களிடம் நேரில் சென்று நமது கருத்தை நிறைவேற்றிக் கொள்வதைத் தவிர்த்து பத்திரிகையில் பறைசாற்றுவதானது எமக்கு அவ்வளவுஉசிதமாகத் தெரியவில்லை. நிற்க,

இனி நாடார்மஹாஜன சங்கவாரக் கொண்டாட்ட விஷயமாய் சென்ற ஆவணி மீ முதல் வாரத்தில் ஸ்ரீமான் வை. மு. மு. அவர்கள் ஆபீஸில் கூடிய பொதுக்கூட்டத்தில் கிளைச்சபையின் ரூபாய்கள் விஷயமாக பிரஸ்தாபம் நடந்த பொழுது சம்மானது இறுதியில் செய்நன்றிமானத்திற்கு விரோதமாய் சபையின் தலைவர்களில் ஒருவரிடம் ரூபாய் 1300 வரை இருக்கிறதாய்த்தெரியவந்தது. சங்கம் நிறுத்தப்பட்டு ஒருவருடத்திற்கு மேலாகி விட்டது; தலைவர்களுடைய மனமெல்லாம் வேறு வழியில் சென்று கொண்டிருக்கின்றன. பொது ஜனங்களோ மேற்படி ரூபாய்களை அன்றிபாரமாக வைத்து சங்கத்தை மீணடும் நடைபெறச் செய்யவேண்டும்; இல்லையேல் இருக்கிற ரூபாய்களை வசூல் செய்து தாய்ச் சங்கத்திற்கு அனுப்பிவிட வேண்டுமென்ற நோக்கமுடையவர்களாய் இருக்கிறார்கள். இதுவரை சமீபத்தில் நடைபெறுமென்று நினைப்பதற்கில்லை. சென்ற வருடத்தைப் போல் வாரக் கொண்டாட்டத்தின் வருவை இந்த வருடம் எதிர்பார்க்க முடியாது. இவ்விதநிலைமையில் நாடார்மஹாஜன சங்கத்தார் கிளைச்சங்க ரூபாய்களைப்பற்றி இதுவரை கவனஞ்செலுத்திய தாய்த் தெரியவில்லை. இனியேனும் கவனிப்பார்களா?

—— எம். எஸ். எம்.

கடிதம்.

மகாஜன சங்கம் மகா—ா—ா-ஸ்ரீ காரியதரிசி அவர்களுக்கு:—இப்பவும், ஏழை மாணவர்கள் லாட்டரிச் சீட்டு வசூல் தொகையை இம்பீரியல் பாங்கிலாவது, இந்தியன் பாங்கிலாவது போட்டுவைக்கிறதென்று 11-11-25 ல் நடந்த மீட்டிங்கில் தீர்மானித்திருப்பதாக 7—12—25உ வெளிவந்த "நாடார் குல மித்திரன்" பத்திரிகையில் காரேரத் பா. செ. கனியப்ப நாடாரால் எழுதப்பட்டிருக்கிறது. ஷயார்கள் எழுதியிருக்கும் சமாச்சாரங்கள் எல்லாம் யாவரும் கவனிக்கக் கூடியவைகள்தான். லாட்டரிச் சீட்டு வசூல் தொகை முழுவதையும் நமது பாங்கில் போட்டு வைப்பது தான் உசிதமான காரியம். ஆகையால் 11-11-25 ல் நமது கவுன்சில் மீட்டிங்கில் நடந்த தீர்மானத்தை ரத்துச் செய்து நமது பாங்கில் போடவேண்டும் என்று தீர்மானிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரி. அ. செ. கந்தசாமி நாடார்.

எழுத்துமாறிய வாக்கியங்கள்.

ஒரு 'பிளாக்பேர்டு' பௌண்டன் பேனா இனாம்!

விடுவிப்புகள் 15-2-26 க்குள் நமக்குக்கிடைக்கவேண்டும்.

(1) இராஜிநாமமல்லாதநாயிரத்துப்படும்முரண்புற்றுகில்லாதிஅறு [நூராக்கள்ராத்தி.

(2) பதில்குந்தம்இடியக்கூர்கள்வகிக்கநாடாறைமிருநாங்கள்இரக் [கமிலாகிராமம்யிரண்டா.

(3) கையாற்குத்திஒருத்திபரிகப்பார்த்தாலும்கிராமநார்கள்இது [வேண்டாம்வாசந்தாயிரமாண்டு.

(4) முந்நூறுபேயர்கள்நான்கள்ஆக்கிதற்குர்தனுல்இருசமம்இதில்.

(5) இந்துக்கொடிக்கும்கள்வர்கம்பருத்தியையுங்கள்திரியில்கச்நிக [ளிவர்ணவகைம்மலிருண்.

(6) ஏவைசிக்கும்ஆறுகன்இவர்கனியாவேலுமம்மதோகுறைவது ம்ஒருபாடுபந்தடிக்கும்செய்யவேண்டும்இருவதுகையாற்பத்திரிர்

(7) அருத்தியையுங்கள்குழை.அபினிஉத்திபிரகின்மகாடிலாமாமிக [ளே!

(8) வாலாம்இருகுறைஅரிமனுள்கமபுல்வக்வல்லவன்!

(9) தங்கமையுள்ளன்குளுஆடன்நாத்துமுத்திபர்பாரதி.

குறிப்பு:—சேர்ந்த விடுவிப்புகளில் முதலாவது எடுக்கப்படுகிற சரியான விடுவிப்புக்கு மேற்கூறிய பவுண்டன்பேனா ஒன்று இனாம்.

சரியாக விடுவித்து பிரைஸ் கிடைக்காத மாணவமாணவிகளுக்குமட்டும் "பாண்டியன்" என்னும் ஓர் இனிய தமிழ் நாவலை பரிசாக வைத்து தனிப்பிரைஸ் எடுக்கப்படும்.

மேலேகண்டவைகளுக்கு சரியான வாக்கியங்களை கீழேயுள்ள வரிகளில் பூர்த்திசெய்து, "3-வது பரிசு" "நாடார்குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை யென்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

(1) _____

(2) _____

(3) _____

(4) _____

(5) _____

(6) _____

(7) _____

(8) _____

(9) _____

விவசாயப் பழமொழிகள்.

அந்தி நாசல் பூத்தால் அடைமழைக்கு லக்ஷணம்.
அந்தி மழை யமுதாலும் விடாது.
அற்பிசித் நலைவேள்ளமும், கார்த்திகைக் கடைவேள்ளமும் கெடுதி.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

இந்திய வர்த்தமானங்கள்.

[illegible] நட்சி மகாநாடு:— இம் மாதம் 19-12-25 காலை சென்னை விக்டோரியா பப்ளிக்ஹாலில், பம்பாய் கல்வி மந்திரி கனம் பி. வி. யாதவர் அவர்கள் தலைமையின் கீழ் கூடிநடந்தது. [illegible] கட்சிப் பிரமுகர்கள் விஜயஞ் செய்திருந்தார்கள்.

•

[illegible]:— பரலக்காடு நில்லா [illegible] ஆலைச் சேர்ந்த கும்[illegible], ஆசிய சாமராஜ்ஜியம் சேர்ந்த [illegible] பி. வி. சங்கரன் என்பவர் 29-11-25 இரத்தினபுரி [illegible] ஆக்ஷேபணாரத்திற்கு [illegible] லஷ்மிநாராயணப் [illegible] கோயிலுக்கு [illegible] தொடரப்பட்ட [illegible] எதிரியின்மேல் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது.

•

[illegible]:— சென்[illegible] உதவி இன்ஸ்பெக்டர் [illegible] ஜாமீன் அமைங்கார் [illegible] பெண்ணையும், அவர் தாயாரையும் கத்தி செய்தார். காரணம் [illegible] பெண்ணின் விலாசத்திற்கு பெங்களூரிலிருந்து பார்சல் வந்ததாகவும், அதை அவர்கள் வாங்கிக் கொண்டு போகும்போது போலீஸார் சந்தேகப்பட்டு வாங்கி உடைத்துப் பார்க்க 300 ரூபாய் அபின் இருந்ததாம்.

•

நரபலி வழக்கு:—இரண்டு கோஷாக்கள் மீது, ஒரு ஹிந்துப் பையனை அபகரித்துச் சென்று கொலை செய்ததாகக் கொண்டுவரப்பட்ட வழக்கில் 18-12-25- செஷன்ஸ் ஜட்ஜ் தீர்ப்புக் கூறினார். கோர்ட்டில் கூட்டம் அதிகமாய் இருந்தது. ஆனால் எதிரிகளை விடுதலை செய்து விட்டார்.

•

ஆகாய விமானம்:— 17-12-25 ல் பம்பாயில் இரண்டு மூன்று ராணுவ ஆகாய விமானங்கள் பறந்து கொண்டிருந்தன. அலை பூனாவில் பயிற்சி கடந்த பின்பு காரச்சிக்கு திரும்பிச் செல்லுவதாகத் தெரிந்தது.

•

மோதிக் கொண்டன:—பாட்னா கலாரயில் பாதையில் போலாவிற்கும் குருதம்பூருக்கும் இடையில் இரண்டு சாமான் வண்டிகள் மோதிக் கொண்டன. பல வண்டிகள் சேதமடைந்து பாதையும் அடைபட்டுவிட்டது. பிரயாணிகளை மாட்டு வண்டிகளில் அனுப்பவேண்டியதிருக்கிறது.

•

கள்ளக் களவு:—சிறிது காலமாகப் பம்பாயில் கள்ளக் களவு அதிகமாக நடந்து வந்ததைப் பத்திரிகைகளில் விரிவாக எழுதப்பட்டதின் பேரில் போலீஸார் அதிக நெற்தை எடுத்துக் கொண்டனர். சந்தேகத்தின் பேரில் இன்று 120 பேர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

•

வைத்திய பரீக்ஷை:—பம்பாயில் எம். பி. பி. எல். முடிவான பரீக்ஷைக்கு முதல் தடவையாகச் சென்ற 190 பேர்களுள் 8 பேர்கள்தான் தேறியிருப்பது வைத்திய மாணவர்களுக்குள் மிகுந்தபரபரப்பை உண்டு பண்ணியிருக்கிறது. மருத்து சம்பந்தமான பாடங்களில் தான் பெரும்பான்மையானவர்கள் தவறியிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

•

ஸிவாஜியின் ஞாபகச் சின்னம்:—அகில இந்திய ஸிவாஜி ஞாபகச்சின்னநிதிக்கு கோலாப்பூர் மகாராஜா லக்ஷம் ரூபாய் கொடுத்திருக்கிறார். இது போல் மற்ற சுதேச மன்னர்களையும் கேட்க ஏற்பாடாகியிருக்கிறது.

•

தென்னாப்பிரிக்காநாடு:—தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியர்களால் அனுப்பப்பட்ட தூதர்கள் சென்றவாரம் பம்பாயில் வந்து இறங்கினார்கள். அவர்களின் வரவைக் கேட்டதும் அவசர உவரமாக, சனம் பட்டினன் தலைமையின் கீழ் இந்தியர்கள்மென்டராலி கியிலிருந்து அனுப்பப்பட்ட கமிட்டியும் தென்னாப்பிரிக்கா போய்விட்டது.

பர்மா வர்த்தமானங்கள்.

பர்மாக் கவர்னர் 2-ந் தேதி மாண்டலே போய்ச் சேர்ந்து, அங்கு 16 நாள் தங்கிவிட்டு திரும்பி ஜனவரி மாதம் 9-ந் தேதி ரங்கூன் வருவார்.

•

அபேக்ஷர்கள்:— இந்திய சட்டசபையிலிருந்து பூ. கூன் ராஜினாமா செய்ததால் ஏற்பட்ட காலிஸ்தானத்திற்கு, முன்பு இந்திய சட்டசபை மெம்பராக இருந்தவரும், பர்மா அய ராஜ்யக் கட்சித் தலைவருமான ஸ்ரீமான் பூ. டோக்கி ஒரு அபேக்ஷகராக நிற்கிறார். பாரிஸ்டர் மோமஞ்தீயும் ஒரு அபேக்ஷகராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

•

ராஜத் துவேஷ வழக்கு:— பாரிஸ்டர் பூ. சிட்ஹினையிங்கின் மீது ராஜத்துவேஷமான பிரசங்கம் செய்ததாகக் கொண்டு ஏற்பட்ட வழக்கின் விசாரணை 18-12-25-ல் முடிந்தது. ஹந்தவாடி செஷனஸ் ஜ-ஜி ஜனவரி 14-ந் தேதி தீர்ப்புக்கூறுவார்.

•

பர்மா மாகாண ஹிந்து சபை:— முதலாவது பர்மா மாகாண ஹிந்து மகாநாடு 1926-ம் வருடம் ஜனவரி மாதம் 9-ந் தேதியிலிருந்து 11-ந் தேதி வரை நடைபெறும் அம் மாநாட்டில் லலாலஜபதி அவர்கள் தலைமை வகிப்பார். தலைவரை வரவேற்க வேண்டிய முஸ்தீபுகள் நடைபெறுகின்றன.

•

கீழ்நாளில் நெருப்பு:—செவ்வாய் கிழமை காலை ரங்கூனைச் சேர்ந்த மேடிக்கான் மாச்கிடான் பாகத்தில் நெருப்புப் பற்றிக் கொண்டது. நெருப்பு வண்டிகள் தகவல் தெரியவும் உடனே சென்றன. லேக்பான் பாகத்தில் சுமார் வீடுகள் பூராவும் தீக்கிரையாகிவிட்டன. இவ்விபத்தால் ஏற்பட்ட நஷ்டம் சுமார் நாலாயிரூபாய் எனக் கருதப்படுகிறது. நெருப்புப் பற்றியதின் காரணம் அறியப்படவில்லை.

•

பர்மா ராணி ஸுபாயவதியின் பிரேத அடக்கம்:— 17-12-25 ல் மாஜி பர்மா ராணி சுபாய வதியின் பிரேதம், சர்க்கில் ரஸ்தாவிலிருந்து கண்டோன்மெண்டுத் தோட்டத்திற்கு அடக்கம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்ட காரி மிகவும் மேன்மையாக இருந்தது. கவர்ன்மெண்டு ஆபீஸ்களும், கலாசாலைகளும், கம்பெனிகளும் மூடப்பட்டிருந்தன. பல முக்கிய பர்மியர்களும், ஸர். ஸாவ் மாவ்லையரவும் வந்திருந்தனர். பர்மா ராஜகுடும்பத்தின் வழக்கப்படி பிரேத ஊர்வலம் புறப்பட்டது. நெருக்களில் ஜனங்கள் வரிசையாகக் கூட்டமாக நின்றுகொண்டிருந்தனர். ரங்கூன் குதிரைப் போலீஸ் படை முதலில் சென்றது. விதிகள், குடைகள், எலும்புகளோ சேகரிக்கும் சாமான்கள் ஒரு அன்மானகிரி, சோபா முதலியவை வெள்ளை உடை தரித்த மனிதர்களால் தூக்கிச் செல்லப்பட்டன. பிறகு ராஜ குடும்பத்தின் மேளம் முதலியவை வந்தன. அதற்குப் பின்னால் பிரேதப் பெட்டி எடுத்துச் செல்லப்பட்டது. பர்மியர்களின் துக்க உடை வெள்ளைதான். ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வெள்ளை உடைதான் தரித்திருந்தனர். கவர்னரும் ரங்கூன் பிரதம பிரஷ்டும் இன்னும் பலரும் அடக்கம் நடக்குமிடத்திற்குப் பக்கத்தில் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட ஸ்தானங்களில் இருந்தனர். பிரேதப் பெட்டி மூன்றாமுறை அந்த வீதியை சுற்றி எடுத்து வரப்பட்டபோது கவர்னர் வழக்கப்படி எழுந்து நின்றார். பிறகு பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது. ராணிக்கு நான்கு பெண்கள் இருக்கிறார்கள். இருவர் ரங்கூனிலும் இருவர் இந்தியாவிலும் இருக்கிறார்கள்.

இலங்கை வர்த்தமானங்கள்.

கண்டியில் நடந்தகொலை.

டிசம்பர் 11 ந் தேதி கண்டியில் முடின்வீன்பன் கொலைசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. முகமூடிகள் இரவு அவன் வீட்டில் மூசலில் நிருடர்கள் புகுந்து அவனைக்குத்தி விட்டு ஓடிவிட்டார்கள். குத்துண்டவனும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்படும் பொழுது பாதையில் இறந்துவிட்டான்.

ஆடிடிங் மாஜிஸ்ட்ரேட் அவ்விடம் சென்று விசாரணை நடத்தினார். குற்றியவன் இன்னும் அகப்படவில்லை.

ரயில்பாதையில் வெள்ளம்.

சென்ற வாரத்தில் ரயில்பாதையில் அநேக இடங்களில் மணல் சரிந்தும் வெள்ளம் ஏற்பட்டும் மிகக்கெடுதலை யடைந்திருக்கிறது. இதன்பயனாக பதுளை இரவு மெயிலும் நானுஓயா மெயிலும் அதிகம் தாமதிக்கவேண்டியிருந்தது.

முதல் முதலாவதாக பண்டாரவளைக்கும் எல்லாவிற்கும் மத்தியில் 187 வது மைல் கல்லிற்கு சமீபத்தில் சென்ற திங்கட்கிழமை மண்சரிந்து ½ மைலில் தூரம் தண்டவாளத்தை மூடிக்கொண்டது. அதனால் பதுளை மெயில் தாமதிக்கப்பட்டது. ஹங்கள் ஹேறிஹவேறுவண்டியில் ஏறிச் செல்லவேண்டியதாயிற்று. அதை இரண்டு நாளில் சுத்தம்செய்தார்கள். இருப்புப்பாதைக்கு இருபுறமும் உள்ள மண் மிக தளர்ச்சியாய் இருப்பதால் ரயில்களை ஜாக்கிரதையாகக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது.

அதே சமயத்தில் கம்பளைக்கும் பேராதனைக்கும் இடையில் இருப்புப் பாதையில் வெள்ளம் அதிகமாக உண்டாகி நான்கு மணிநேரம் தங்கியிருந்தது. இதனால் ரயில்கள் சிலவெகுதாமதமாகவந்தன.

தடபிரிவு ரயில்பாதையில் மாகோ விற்குச்சமீபத்தில் பாதையில் அநேக இடங்களில் வெள்ளம் அதிகமாக இருந்தால் அன்று கொழும்பிற்கு வந்தலைமன்னார் ரயில் 6 மணி நேரம் தாமதித்து வந்தது.

பந்தய ஓட்டங்களுக்கு வரி.

சென்ற புரன்கிழமை கொழும்பு நகர சங்கத்தின் கூட்டம் ஒன்று கூடியது. அச்சமயம் அவர்கள் சட்டக்கமிட்டியின் அறிக்கையைப்படி குதிரைப்பந்தய ஓட்டங்களில்! இம்பணத்திற்கு 100 க்கு ஐந்திற்கு அதிகப்படாமல் வரிபோட கவர்ன்மெண்டை சட்டமேற்படுத்தக் கேட்டுக்கொள்வதைப் பற்றி ஆலோசித்தார்கள்.

அச்சமயம் சட்டவிரோதமான ஒரு காரியத்திற்கு வரிபோடுவதால் சட்ட அனுமதியை உடையதாக நிறபடியால் அதற்கு வரிபோடும்படி ஏற்பாடுசெய்தல் பிசகென்று மிஸ்டர் ஏச். எல். டி. நெல் சொன்னார்.

கர்னல் ஜயவர்த்தன, அவ்வரிபோடுவதை அனுசரித்துப்பேசினார். பட்டினத்தில் இன்னும் சீர்திருத்தங்கள் செய்யவேண்டிய அதிகம்வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி ஆலோசித்த கமிஷனும் வரிபோடுவது சரியென்று தீர்மானித்திருக்கிறது.

கவர்ன்மெண்டைபணம் கேட்டால் அவர்கள் தங்கள் சொற்படி வரிபோட்டுக் கொள்ளச்சொல்லுவார்கள். ஆகையால் வரிபோடுவது அவசியமென்று சொன்னார்.

அதை ஒட்டிற்கு விட்டபோது பழையநிர்மானமே அனுசரிக்கப்பட்டது.

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு!
ஒற்றுமை நீங்கிடிலனைவர்க்
குந் தாழ்வு!!

பொது வர்த்தமானங்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

1926-ம் வருஷம் மார்ச்சு மாதம் 6-ந் தேதியில் இம்மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் வழக்கம்போல் கடந்தப் பெறும் ஆங்கிலக்கலை மாணவர்களுக்காக ஏற்பாடுத்தியுள்ள மெற்றிகுலேஷன் ஏ., பி. ஏ. ஆங்கிலத் தமிழ்ப் பரீக்ஷைக்கு 1926-ம் வருஷம் ஜனவரி மாதம் 22-ந் தேதிக்குள்ளாகவும், 1926-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 5, 6, 7 ம் தேதிகளில் நடத்தப்பெறும் தனித்தமிழ்ப் பரீக்ஷைக்கு குறிப்பிட்ட வருஷம் மார்ச் மாதம் 20-ந் தேதி (2-2-26) க்குள்ளும், மேற்படி தமிழ்ச் சங்கப் பரீக்ஷைக்கு வரும் மாணவர்கள் விண்ணப்பப் பாரங்களையும் பரீக்ஷைக் கட்டணத் தொகையையும் இச்சங்கமாகிய மானேஜருக்கு அனுப்பியேன்மென்றும், மேலே குறிப்பிட்ட தேதிகளுக்குப் பின்பு வரவாகுமாவும் அங்கீகரிக்கப்படமாட்டா வென்றும் இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

குறிப்பு:— பி. ஏ., இளையர் வகுப்பு மாணவர்களுக்கு யூனிவர்ஸிடியாரால் வைக்கப்பட்ட Group VI தமிழ்ப் பாடங்களும், ஸ்கூல் பைனல் மாணவர்களுக்கு C. Group க்கு ஏற்பட்ட A and c Group தமிழ்ப் பாடங்களும் இன்டர் மீடியேட் வகுப்பு மாணவர்களுக்கு யூனிவர்ஸிடியாரால் இன்டர் மீடியேட் வகுப்புக்கு வைக்கப்பட்டுள்ள தமிழ்ப்பாடங்களும் சங்கப் பரீக்ஷைக்கு வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பாடங்களாகும்.

அரை அணா லேபில் அனுப்பினால் விண்ணப்பப்பாரம் இவ்வாபீஸினின்று பெறலாம்.

லெக்ஷ்மீ நாராயணையர்,
மானேஜர்.

விக்ரவாண்டி ஆதித்திராவிட மகாநாடு

ஸ்ரீமான் வீரய்யன் அக்கிராசனம்.

1925 ம் வருஷம் டிஸம்பர் மாதம் 9 உ விழுப்புரம் தாலுக்கா ஆதித்திராவிடர்கள் மகாநாடு வீரய்யன் அவர்கள் ஸ்ரீமான் எல். வீரய்யன் அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. வியாபாரமாக ஆதித்திராவிடர்கள் வந்திருந்தார்கள். அக்கிராசனர் ஆதித் திராவிடர்கள் முன்னேற்றத்தைப்பற்றி வெகு உருக்கமாய் பேசினார். அடுத்த [illegible] அவ்வூரிலுள்ள தாலுகாப் போர்டு பாடசாலைக்குச்சென்று ஆதித்திராவிட பிள்ளைகள் ஒருவரும் இல்லாதபடியால் ஒரு பையனை அழைத்துவந்து [illegible] லில் சேர்ப்பித்தார். அந்த [illegible] தலைவர் பிராமணர். அவர் மற்ற [illegible] ன்களைப் பள்ளியை விட்டு வெளியேறும்படி குறிப்பு செய்து [illegible] இப்பொழுது மற்ற ஹிந்து [illegible] வகுப்பார் பிள்ளைகள் ஒருவரும் [illegible] வதிலே இது விஷயத்தைப் பற்றி மேலதிகாரிகளுக்கு கிளர் எழுதினார்கள். அதிகாரிகள் கேளில் பார்த்து விட்டு ஆதித்திராவிடர்களை பள்ளியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னதாகத் தெரிகிறது. இனி வனம் சப்ஸிலெக்டர் விகிரவாண்டிக்கு முகாம் செய்து கலைமையை [illegible] கலனித்து கலகம் நடக்காமல் [illegible] நான் போலீஸ் பந்தோபஸ்து செய்து வந்தார். ஆதித்திராவிடர்கள் குடியிருக்கிற [illegible] விசாரித்து குடியிருக்க வேண்டிய இடம் ஏற்பாடு செய்து அருவதாக சொல்லிப்பேலியிருக்கிறார் என்று [illegible] திருபர் எழுதுகிறார்.

•

பறக்கும் படகு.

கப்பற்படை இலாகாவிற்காகப் [illegible] யதாகக் கட்டப்பட்ட பெரிய [illegible] கும்படகானது டிசம்பர் 13 உ [illegible] லங்காஷயர் கடற்றையிலுள்ள விகா[illegible] என்ற விடத்தில் பறக்க விடப்பட்டது. இதனுடைய 2 பெட்ரோல் [illegible] ஜின்களுமாகச் சேர்ந்து 1000 குதிரை சக்தியை உற்பத்தி செய்கின்றன. இந்தப் படகு 830 மைல் தூரத்தி[illegible] ன்ன பெலிக்ஸ்டோ என்ற விடத்திற்குப் புறப்பட்டது. மேற்றையதினம் மாலை 560 மைல் தூரத்திலுள்ள பிலிமவுத்திற்கு வந்துசேர்ந்தது. இ[illegible] எல்லாத் தகுதிகளையுமிது. 7 [illegible] நிறையுள்ளது. 90 அடி அகலமிருக்கிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

விபசாரத்தின் வியர்த்தம்.

தேவதாசிகளுக்கு ஓர் எச்சரிக்கை.

மூவலூர், ஸ்ரீமதி. ராமாமிர்தம்மாள் தனது சொந்த அனுபவத்தை குடியரசில் எழுதுவதாவது:—

சகோதரிகளே!

எனது சொந்த அனுபவத்தை உங்களுக்கு அறிவிக்கவேண்டி இதை வரைகிறேன். நான் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவள். என்னு தாயாரும், தந்தையும் நிறைந்த சாதுக்குணமுடையவர்கள். இத்தகைய சாதுக்களுக்கு நான் ஒரு பெண்ணாய் பிறந்தேன். என்னை ஒரு வாலுக்கு மணம் செய்து வைக்க உத்தேசித்து, தமிழ் மொழியான தாய் மொழியில் பட்டம் என்னைப் பயிற்றுவித்தனர். எனது வாழ்க்கையைக் கேவலவழியில் திருப்பிய குலதரோகிகளான என் சிறிய தகப்பனும், பெரிய தாயரும் என் கத்தையிடம் வந்து என்னை விலைத் தொழிலுக்கு விலம் படியும், பெண் புத்திசாலியென்றும், சங்கீதமும் தெரிந்து கொண்டாளாதலால், நல்ல சம்பாத்தியம் பின்னால் கிடைக்குமென்றும், கலியாணம் செய்து கொடுக்கவேண்டுமென்றும் அடிக்கடி சொல்லி அவர்களை மதிமயங்கவைத்துப் போவார்கள். இதனால் எனது அன்னையும், தந்தையும் என்னை சங்கீதத்திலும், நாட்டியத்திலும் பயிலவைக்க வேண்டியதாயிற்று. இத்தகைய ஆடகளினால் என் வாழ்க்கையின் கடைசி வேறு விதமாய்விட்டது. இந்த சமயங்களில் வருடம் 1-க்கு 1000 ரூபாய் சம்பாதித்து வந்தேன். இத்துடன் நில்லாமல் என் வாழ்க்கையின் ஆடம்பரத்தால், லட்சாதிபதி ஒருவரை நான் மணக்க வேண்டியதாயிற்று. இந்தமை நிலையிலிருந்தும் கேவலவாழ்வாகிய பொதுமக்கள் வாழ்வையும் கடத்தினேன். பாதக வாழ்க்கையால் தேடிய பொருளால் என்ன பயனடைந்தேனெனில், ஒன்று மில்லை. ஆனால், பெண்களே, சகோதரிகளே விலைத் தொழிலாகு விட்டு, சுகமாய் உண்டு கொண்டாடித் திரியும் சொந்த பந்து கணவர்களுக்கும், நண்பர்களுக்கும் புத்திரருக்கு செய்விட்டு சாப்பாடு போடுவதும், தீபாவளி போன்ற காலங்களில் கேவலம் வேஷ்டிகளும், பெண்களுக்கு கலவி சேலைகள் வாங்கிக் கொடுப்பதும், அவர்களால் நீ நல்ல ஜீவகாருண்ணிய முடையவளென்று புகழ் பெறுவது மட்டும் கிடைக்கும். நான் இவ்விதம் செலவு செய்ததாலும், ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்ததாலும் கானடைந்த லக்ஷாதிப் பிரபுவுக்கு 50000-ம் ரூ கடன் ஏற்பட்டு விட்டது. என்னிடத்திலோ 5000-ம் ரூ கூட கையிருப்பில்லை. 1910-ம் ஆண்டு என்னை யடைந்த லக்ஷாதிபதி உலக வாழ்வை நீத்து விண்ணுடேய்தினார். இது சமயம் எனது வாழ்க்கை நிறைந்த இன்னலுக்குட்பட்டது. இப்படிப்பட்ட கெடுதல்கள் யாரால் விளைந்தது? என்று நினைத்தேன். எமது முன்னோர்கள் சரித்திரங்களை படித்து ஆராய்ந்தேன். தங்கள் சுயநலம் பொருட்டும், தாங்கள் சுகஜீவியாயிருக்க உபதேசித்தும் நம்மைக் கேவல வாழ்க்கையில் விட்டுக் கெடுக்கிறார்கள்.

இந்தக் கெடுதலான வழக்கத்தைத் தடுக்கலாம், (பெண்கள்) முயலவேண்டுமென்று எனது சகோதரிகளான தேவதாசிப் பெண்மணிகளை வேண்டிக் கொள்ளுகிறேன். இதைத் தடுப்பதற்காக, 7,8, வருட காலமாக உழைத்தும், தடுத்தும் வருகின்றேன். மகாத்மா அருள் வாக்கைப் பின்பற்றி, வெளிப்படையாக வந்தும் எனது சகோதரிகள் பொருட்டு தொண்டும் செய்து வருகிறேன். பெண்களே விபசாரத்திற்கு விட்டு அந்த வரவைக்கொண்டு வயிறு வளர்த்து, நாட்டுக்கும், குலத்துக்கும் துரோகிகளாய், சோம்பேறிகளாயிருப்பதும் ஆண்மக்களை இடித்தும் புத்தி கற்பித்தும் உண்மை ஆண் மக்களாக நாம் (பெண்மக்கள்) தகுந்த முயற்சி உட்னே எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் உங்களைக் வேண்டிக் கொள்ளுகிறேன். பரவை நாச்சியார், ஆண்டாளம்மையார், மாணிக்காச்சியார், காரைக்காலம்மையார், மணிமேகலை போன்ற உத்தமத்தமிழன்னைகள் தோன்றிய தமிழ் நாட்டில் இத்தகைய சீர்கேட்டைக் காண உங்கள்மனம் வருந்தவில்லையா? ஆதலின் நமது குலப்பெண்களை உத்தமிகளாகவும் அவர்களைச் சீர்திருத்தும் விடயமாக சென்ற வருடம் ஒரு மகாநாடு கூட்டினேன். ஆழைப்புக் கடிதங்களை எதிர்பார்க்காமலே பல கலியாண வீட்டுகளுக்கு பெண்களை விலைகளாக்கும் குணங்களை எடுத்தரைத்து, இதுவரை அநேக பெண்களிடத்தில் இனி தங்கள் பெண்களையோ அன்றி, சகோதரிகளையோ விபசாரத்திற்கு விடுவதில்லை யென்ற வாக்குறுதியும் வாங்கியிருக்கிறேன். இரண்டாவது மகாநாடு இவ்வருடத்தில் கூட்டி தேசபக்தர்களைத் தருவித்து அவர்களைக்கொண்டு உபந்நியாசங்கள் செய்வித்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் புது உணர்ச்சியை உண்டாக்கினேனென்று, சில சுயலக்காரர்கள் சென்ற வாரத்தில் விளைந்த கலியாணத்தில் எதிர்ப்பிரசாரம் செய்தார்கள். அன்றியும், நான் குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்பென்றும் என்னை சாதிக்கட்டுப்பாடு செய்வதாயும் இனி எந்த கலியாணத்திலாவது கலந்துகொண்டாலது பகிஷ்கரிப்பது என்று உபந்நியாசம் செய்தால் என்னை அடிப்பதாயும், சொன்னார்களாம். ஸ்ரீமான் குச்சுலம் குப்புசாமி நட்டுவனார் அவர்களிடம் எதிர்வாதாடினது பயனற்றபடி. எனது அருமைச் சகோதரிகளே! அந்த சுயலக்காரர்களால் மயங்காது போகாதீர்கள்! என்னை அடித்தால் நான் பயப்படப்போவதில்லை "நாமார்க்கும் குடியல்லோம்; நமனையஞ்சோம்" சுயநரியப் புலிகளின் தந்திர—இனிய வார்த்தைகளைக் கேட்டு உங்கள் அருமைப் புதல்விகளை, தமிழ்ப் பெண்களைகேவலப்பொது மக்கள்வாழ் கையில் வீட்டுக் கெடுக்காதிருக்கும்படி உள்ளமுக்காலும் வேண்டுகிறேன்.

நீங்களிருக்கும் திக்கு நோக்கி வணங்குகிறேன். அழகிழந்து, அறிவிழந்து, குலமிழந்து, குணமிழந்து, தமிழ்ப் பெண்ணின் நடையிழந்து, கற்பிழந்து, நாணமிழந்து, கடவுளின் அருளுமிழந்து விலைகளாய் வீதியிற்போவாரை நோக்கி நிற்பது தமிழ்ப் பெண்ணுக்கு அழகாகுமா? இது முறையா? அல்லது பெண்கள் தருமமாகுமா? இந்த நிலைக்கும் பெண்களை நிறுத்தி, தங்கள் வாழ்வை வெட்கமின்றி நடத்தும் ஆண்மக்களை ஆண்மக்களென்று எப்படி அழைத்தல் கூடும்? நம்மைப்போன்ற மற்ற தமிழ்ப்பெண்களும், அறிஞர்களும் நமது தொழிலை ஏளனம் செய்கின்றார்களே! அதையேனும் நீங்கள் கருதவேண்டாமா? காங்கியிடங்களும் தூர்ப்பாக்கிய சகோதரிகள்" என்று நம் நிலைமையை குறித்து வருந்துகின்றார்களே! அந்த மகாநாடுடைய முறைவீட்டையாவது செவிமடுத்து அதன்படி நீங்கள் திருந்த வேண்டாமா? என் இனிய குலக்குமரிகளே! நாம் ஒவ்வொருவரும்; நமது குலமகளிரை விலை மகளிராக்காமல், குலமகளிராக்கப்பாடுபட வேண்டுமென்று உங்களை மீண்டும் வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாயாஜால போட்டோக்கள்.

இதுபார்வைக்கு வெள்ளைகார்டுகளைப்போல் உருவங்களேயில்லாமல் இருக்கும். இத்துடன் அனுப்பும் டைரக்ஷன்படி செய்ய ஆச்சரியமாய் பாரில் மாதரின் அழகிய உருவப்போட்டோக்களாய் மாறிவிடும். 100 போட்டோக்களின் விலை ரூ 2. ஆர்டருடன் 4 அணா தபால்முத்திரை அனுப்பவும். விலாசம்:—

எம். ஆர். எ. லக்ஷ்மி அண்டு கம்பெனி
42 வெங்கடெமேன்தெரி வீதி.
மண்ணடி, மதராஸ்.

---

18 H. B. ஆயில் இன்சின்

தேவையுள்ளவர்கள் எழுதவும்.

18 ஹார்ஸ் பவர் ஆயில் இன்சின் 1 நீர் எஞ்சில் பக்கட்டைப்பு ஹல்லர் B டைப்பு, கிரவுன் நட்ல் டிக்கேட்டிக்கேட்டர், பெல்ட் முதலிய நம்பிளீட் செட்டுடன் சில்லரைச் சாமான்களுடன் தயாராகவிருக்கிறது. தேவையுள்ளவர்கள் விலை விபரத்திற்கு எழுதவும்.

வ. சி. பெ. கொல்லிமலை நாடார்,
அருப்புக்கோட்டை.

ஜெயகாந்தாசவம்.

எல்லாவியாதிகளுக்கும் கைகண்டமருந்து. ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இது எவரும் மிருப்பது ஒருதேர்ந் தவைத்தியன் பக்கத்திலிருப்பதுபோலாகும்.

விலை புட்டி 1 க்கு ரூ 2

காந்தி சங்கம் உப அக்காரன் ஸ்ரீமான் ஏ. ஈ. தணிகாசலம் எழுதுகிறார்:— "ஜெயகாந்த ரசத்தை உபயோகித்த அனுபவத்திலிருந்து அதை மிகவும் நல்லமருந்தென்று சொல்லுவேன்."

ஜனப் ஏ. ற. முகம்மது சாலிஹு அவர்கள் எழுதுவதைக் கவனியுங்கள்:— "நெடுநாட்களாக டாக்டர் வரதராஜு அவர்களின் மின்சார ரசத்தை உபயோகித்துவந்த யான் அதற்குரிய சகல மேலான குணங்களும் ஜெயகாந்தரசத்திற் கிருப்பதை பிரத்தியக்ஷமாயறிந்து சந்தோஷிக்கிறேன்"

ஜெயாஞ்சனம்

எல்லா நோவுகளையும் வலிகளையும் உடனே குணப்படுத்தும் ஒரு திவ்விய அஞ்சனம்.

விலை புட்டி 1 க்கு அணா 12

ஸ்ரீமான் ஜி. கே. சுந்தரம் அவர்கள் எழுதுவதைப் பாருங்கள்:— ஜலதோஷத்துக்கும் தலைவலிக்கும் ஜெயாஞ்சனை உபயோகித்ததில் அமிர்தாஞ்சன், ஓரியண்டல்பாம் போன்ற பிரக்கியாதி பெற்ற மருந்துகளுக்கு சமமாயும் மற்றும் அதிக பாம்களை விட பன்மடங்கு சிறந்ததெனவும் அனுபவபூர்வமாயறிந்தேன்."

நற்சாட்சிப்பத்திரங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன.

ஏஜெண்டென் தேவை. நல்லகமிஷன்.

P. P. K. மாணிக்கவாசகம்,
52, செட்டித்தெரு, கோழும்பு

எல்களிடம் கதர்ப் புடவைகளும் மற்ற சகலவிதமான ஜவுளிகளும் இருக்கின்றன. விலை சரசம்.

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!!
முந்துங்கள்! சொற்பக்காப்பிகளே கைவசம் உள்ளது!

227 பக்கம்] "பாண்டியா" [விலை அணா 12

ஓர் இனிய தமிழ் நாவல்.

இதில் முக்கியமாக கடவுளிடத்து பக்தி, விகவாசம் உடையவர்கள் அடையும் பயன் இன்னின்னவென்பதையும், பெற்றோர்கள் பிள்ளைகளைப் பரிபாலிக்கும் அன்பும், பிள்ளைகள் பெற்றோர்களுக்குச் செய்படிந்து நடக்கும் நடத்தையும், எஜமான்களுக்கும், பணியாளர்களுக்கு முள்ள தாரதம்மியமும், அன்னவர்கள் கடைப்பிடித்தொழுகவேண்டிய நன்முறைகளும், பெண்களுக்கிருக்கும் எல்லாவித லக்ஷணக்களிலும் கற்பின் லக்ஷணமே சிறந்த பூஷணமென்றும், கற்பின் மகிமையானது எல்லையில்லாத் தொல்லைகளையும் வெல்லும் நிறமையான தென்றும் வெகு தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

அன்றியும், ஆங்காங்கு எடுத்துத் தொடுக்கப்பட்டிருக்கும் உன்னத தமிழ்மொழிகளும், ஆன்றோர்களால் இயற்றப்பட்ட இனிய பாடல்களும் இடையிடையே தோன்றுவது கதையை வரிப்போர்களுக்கு மிகவும் ரசக்கமாயிருக்கும்.

இவ்வருமையான நூலானது, சிவகாசியில் நடந்தேறிய கலகத்தையும் அதன் முடிவையும் வெகு சிறப்புடன் எடுத்துக் காட்டியிருப்பதோடு, நாடார்குல மக்களின் மேன்மையையும், உதார குணத்தையும், உத்தம லெட்சணங்களையும், ஈஸ்வர பக்தியையும், வீரக் செயல்களையும் தெளிவுற எடுத்துக்காட்டியிருப்பதால் இதை ஒவ்வொரு நாடார்குல மக்களும் அபிமானித்து பிரபலப்படுத்தக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்புஸ்தகம் யாவராலும் வாங்கப்படவேண்டுமென்பதைக் கருதியே மிகவும் சொற்பக் கிரயத்திற்கு வெளியிட்டிருக்கிறோம். உயர்ந்த பதிப்பு, கிளேஸ் காகிதம், கெட்டியான பயிண்டு செய்யப்பட்டது.

விலை அணா 12.

குறிப்பு:—புஸ்தக வியாபாரிகளுக்கும், அதிகம் ஆர்டர் செய்பவர்களுக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

(1) ஆசிரியரிடம்:-தஞ்சை லானி அச்சுக்கூடத்திலும்; [மகா
(2) பழனிக்குமாரு பிள்ளை, மெய்கண்ட விலாஸ் புஸ்தகசாலை, விரு
(3) மானேஜர், 'நாடார்குல மித்திரன்' ஆபீஸ், அருப்புக்கோட்டை.
(4) முத்தையா அண்டு கம்பெனி, புஸ்தக வியாபாரிகள், திருநெ
[வேலி தூங்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection